விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 24
ஒலி 195 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 17 ஞாயிற்றுக்கிழமை (02.07.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

### 60 மேலதிக வாக்குகளால்

# கடன் மறுசீரமைப்பு பிரேரணை நிறைவேற்றம்

(கொழும்பு)

**உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பில் பாராளுமன்றில் முன் வைக்கப்பட்ட பிரேரணை திருத்தங்களுடன் 60 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.**

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு திட்ட பிரேரணை மீதான விவாதம் நேற்று பாராளுமன்றத்தில் நடைபெற்றது.

இதனை தொடர்ந்து இடம்பெற்ற வாக்கெடுப்பில் பிரேரணைக்கு ஆதரவாக 122 வாக்குகளும் எதிராக 62 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

இதன்படி உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு திட்ட பிரேரணை திருத்தங்களுடன் 60 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டதாக சபாநாயகர் அறிவித்தார்.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசில் உள்நாட்டுக்கடனை மறு சீரமைப்பதற்கு தேவையான அனைத்து அனுமதிகளும், நிதி பொருளாதார ஸ்திரத்தன்மைக்கான தேசிய கொள் கையை அமைச்சருக்கு 04

## நயினை நாகபூஷணிக்கு இன்று இரதோற்சவம்



## மதுபானங்களின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

மதுபான போத்தல் ஒன்றின் விலை 300 ரூபாயினாலும் பியர் ஒன்றின் விலை 50 ரூபாயினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக கலால் திணைக்களம் அறிவித்துள்ளது.

நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் கலால் வரி அதிகரிக்கப்பட்டுள்ள 04

## பிரான்ஸ் கலவரம்
### 13 ஆயிரம் பேர் கைது



04

### கடன் மறுசீரமைப்பை விட

## மாற்றுத் திட்டம் உண்டாயின் எதிர்க்கட்சிகள் முன்வைக்கலாம்



### நீதி அமைச்சர் விஜயதாஸ

(கொழும்பு)

நாடு வங்குரோத்து நிலையடைந்துள்ளமைக்கு 225 உறுப்பினர்களும் பொறுப்புக் கூற வேண்டும். கடன் பெற்ற அரசாங்கங்களின் அமைச்சரவையில் இருந்தவர்களில் பெரும்பாலானோர் இன்று ஆளும், எதிர்க்கட்சி பக்கம் உள்ளார்கள். 04

### வவுனியா மாவட்டத்தில்

## 400 மில்.டொலர் முதலீட்டில் சீனி உற்பத்தி நிலையம்

(வவுனியா)

வவுனியாவில் 400 மில்லியன் டொலர் முதலீட்டில் 200 ஏக்கர் காணியில் சீனி உற்பத்தி நிலையம் அமைக்கப்படவுள்ளது.

முதலீட்டை ஊக்குவித்தல் மற்றும் சீனி கைத்தொழிலை ஊக்குவிப்பதில் குறிப்பிடத்தக்க நடவடிக்கையாக தாய்லாந்தின் Sutech Sugar Industries Ltd நிறுவனத்திற்கு வவுனியா மாவட்டத்தில் பரந்த நிலப்பரப்பை வழங்குவதற்கு அமைச் 04

### யாழ்.நகரில்

## பழக்கடை வியாபாரியை கடத்திச் சென்று தாக்குதல்

### நால்வர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நகரிலுள்ள பழக்கடை வியாபாரி ஒருவரை கடத்திச் சென்று தாக்குதல் நடத்தியதாக இளைஞர்கள் நால்வர் யாழ்ப்பாணப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நல்லூர் அரசடியைச் சேர்ந்த 18, 20, 23 மற்றும் 24 வயதுடைய நால்வரே யாழ்ப்பாணம் மாவட்ட 04

## வவுனியாவில் சத்தமின்றி முளைத்த புதிய விகாரை

(வவுனியா)

வவுனியா வடக்கு நெடுங்கேணியில் சப்புமல்கஸ்கட ரஜமகா விகாரை எனும் புதிய விகாரை நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

வெடி வைத்தகல் - கச்சல் சமளங்குளம் என்ற பகுதியில் இப்புதிய விகாரை நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இவ் விகாரையின் சுற்றுப்புறம் காட்டுப்பகுதியாக காணப்பட்ட நிலையில், இந்த விகாரையின் நிர்மாணிப்பு பணிகள் யாரும் அறியாத வகையில் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த விகாரையில், நாளை பூரணை தினத்தில் வழிபாடுகள் ஆரம் 04

## புலிகளின் கிளை அமைப்பே கூட்டமைப்பு

### சரத் வீரசேகர



(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது தேசத்துரோக அமைப்பாகும்.

எனவே, அக்கட்சியின் முடிவுகள் தொடர்பில் அலட்டிக் கொள்ள வேண்டிய தில்லையென ஸ்ரீலங்கா 02

## நுணாவிலில் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நுணாவில் மத்தி பகுதியில் நேற்று சனிக்கிழமை காலை நபரொருவர் அவரது வீட்டுக் காணியில் தூக்கிட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நுணாவில் மத்தி சாவகச்சேரியைச் 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தற்காலிக சாரதி அனுமதிப்பத்திர செல்லுபடிக் காலம் நீடிப்பு

தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரங்களுக்கான செல்லுபடிக் காலம் இரண்டு வருடங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் பந்துல குணவர்தனவினால் இதற்கான அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, கடந்த வருடத்தின் மார்ச் 31 ஆம் திகதி முதல் ஜூன் 30 ஆம் திகதி வரை விநியோகிக்கப்பட்ட தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரங்கள், விநியோகிக்கப்பட்ட திகதியிலிருந்து 02 வருடங்களுக்கு செல்லுபடியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (4.7)

## இரண்டு வருடமாக நோயாளர்களுக்கு சிகிச்சை அளித்த போலி மருத்துவர் கைது

பதிவு செய்யப்பட்ட வைத்தியர் போல் நடித்து இரண்டு வருடங்களாக நோயாளர்களுக்கு சிகிச்சை அளித்த நபர் ஒருவரை கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

உஸ்வெட்டகெய்யாவ பிரதேசத்தில் சட்டவிரோதமாக மருத்துவ சிகிச்சை நிலையம் ஒன்றை நடத்தி நோயாளர்களுக்கு சிகிச்சை அளித்து வந்த இவர், இருவேறு பெயர்களில் தோன்றியுள்ளதாக பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து, உளவாளி ஒருவரை பயன்படுத்தி மேற்கொண்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் வசம் இருந்த போலி முத்திரைகள் உள்ளிட்ட பல போலி ஆவணங்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேகநபர் கொழும்பு 12 பகுதியைச் சேர்ந்த 55 வயதுடையவர் என பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் தெரியவந்துள்ளதுடன், அவர் வைத்தியராகும் தகுதியற்றவர் எனவும் இதற்கு முன்னர் வைத்தியர் ஒருவரின் கீழ் பணிபுரிந்தவர் எனவும் தெரியவந்துள்ளது. (4.7)

## நல்லூர் வீரமாகாளி அம்மனுக்கு இன்று தேர்த் திருவிழா

(யாழ்ப்பாணம்)

வடவாயிற்கிழத்தி என வர்ணிக்கப்படும் வரலாற்றுச் சிறப்புமிகு நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலய இரதோற்சவம் இன்று நடைபெறவுள்ளது.

அதிகாலை முதல் விசேட பூஜைகள் இடம்பெற்று காலை 7 மணியளவில் அம்பாள் இரதத்தில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பார். (4.7)

## போதைப்பொருளை கட்டுப்படுத்த குழு

(கொழும்பு)

நாட்டில் போதைப்பொருள் அச்சுறுத்தலை உடனடியாகக் கட்டுப்படுத்துவதற்கும் ஒழிப்பதற்கும் பாராளுமன்ற விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் வேகமாகப் பரவிவரும் போதைப்பொருள் அச்சுறுத்தலை உடனடியாகக் கட்டுப்படுத்துவதற்கும் ஒழிப்பதற்கும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய வழிமுறைகள் குறித்து ஆராய்ந்து அது பற்றிய அவதானிப்புகளையும் விதப்புரைகளையும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்ற விசேட குழுவில் கடமையாற்றுவதற்காக டிரான் அலஸ் தலைமையில் 11 பேர் கொண்ட உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன நேற்று பாராளுமன்றத்தில் அறிவித்தார். (4-7)

## புலிகளின்...

பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர விமர்சித்துள்ளார்.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு திட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கவுள்ளதே என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே சரத் வீரசேகர இவ்வாறு விமர்சித்துள்ளார்.

நாட்டுக்கு நன்மை பயக்கக்கூடிய விடயங்கள் எல்லாவற்றையும் எதிர்க்கும் தேசத்துரோக அமைப்பே கூட்டமைப்பு. விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் கிளையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. பிரபாகரன் முன்னிலையிலேயே கூட்டமைப்பினர் பதவியேற்றனர். அவர்கள் கூறுவது தொடர்பில் அலட்டிக்கொள்ள வேண்டியதில்லை." எனத் தெரிவித்தார். (4.7)


சிவபூமி

SIVA POOMI

**சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலை**

கோண்டாவில்

**20 ஆவது ஆண்டுப் பூர்த்தி விழா**

இடம்

சிவபூமி பாடசாலை, கோண்டாவில்

காலம்

03.07.2023 காலை 9.30 மணி

தலைவர்
கலாநிதி ஆறு. திருமுருகன்
(தலைவர் - சிவபூமி அறக்கட்டளை)

பிரதம விருந்தினர்
பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தம்பதிகள்
(துணைவேந்தர் - யாழ். பல்கலைக்கழகம்)

சிறப்பு விருந்தினர்
வைத்தியகலாநிதி வை. மனோமோகன் தம்பதிகள்
(அவுஸ்திரேலியா)

கௌரவ விருந்தினர்
திருமதி ஏழிலரசி அன்ரன் யோகநாயகம்
(பிரதேச செயலர் - நல்லூர்)

ஆசியுரை
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
(முதல்வர், நல்லை ஆதீனம்)
ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள்
(முதல்வர், சுப்ரமுனிய கோட்டம், கோப்பாய்)

20 ஆவது ஆண்டு விழாவில் தாங்கள் யாவரும் பங்குபற்றிச் சிறப்பிக்க அன்புடன் அழைக்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் சிவபூமி பாடசாலை, கோண்டாவில்.

நிர்வாக சபை, சிவபூமி அறக்கட்டளை, இலங்கை.

(16162)



**Hybrid International Hub (pvt) ltd Jaffna**

கனடா, லண்டன், யப்பான், மலேசியா அவுஸ்ரேலியா, இந்தியா ஆகிய நாடுகளுக்கான விசா விண்ணப்பங்கள் பூர்த்தி செய்து தரப்படுவதுடன் விசாக்களும் பெற்றுத் தரப்படும். (C-6854)

Hybrid International Hub (pvt) ltd Jaffna

077 815 5920, 021 222 1265



**தவறிவிட்டது**

ஜெயபாலன் ஆகிய எனது பாஸ்போட் மற்றும் ஆவணங்கள் ஏழாலைக்கும் கச்சேரிக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ் வரும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

தொடர்புகளுக்கு (C-6857)

076 107 5054



**காண்டம் பார்த்தல்**

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் துல்லியமாக கணித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

உள்நாடு வெளிநாட்டுத் திருமணத் தொடர்புகளுக்கு

wahlen STR -143-4242, Laufen, Swiss

Tel : 0041768185443/0041615544242

வெளிநாட்டு மணமகன்களுக்கு மணப்பெண்கள் தேவை. (16158)

தொடர்புகளுக்கு (உரும்பிராய்)

076 835 1932/021 223 2222



**ஊர் கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு**

**தினமும் பெற்றுக்கொள்ளலாம்**

| | |
|---|---|
| 1 நாள் குஞ்சு | - 200/= |
| 1 மாதம் | - 600/= |
| 1.5 மாதம் | - 750/= |
| 2 மாதம் | - 900/= |

(16167)

077 332 2433



**உறுதிக்காணி தேவை**

கிளிநொச்சி நகரப் பகுதியில் இருந்து சுற்று வட்டம் 5 Km தூரத்தில் அல்லது கரடிப்போக்கிற்கும் புதுக் காட்டுக்கும் இடையில் A9 வீதியை அண்மித்ததாக 5 ஏக்கர் மேட்டுக்காணி தேவை. (16163)

077 556 5695



**கடை வாடகைக்கு உண்டு**

யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் ஆடிய பாதம் வீதி திருநெல்வேலியில் (யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு முன்பாக) அமைந்துள்ள கட்டிட தொகுதியில் கீழ் கடைகளும் 1 ஆம் தளத்தில் 1200 சதுரஅடி கொண்ட கட்டிடமும் வாடகைக்கு உண்டு. காப்புறுதி மற்றும் நிதி நிறுவனங்களுக்கும் மற்றும் தனியார் அலுவலகங்களுக்கும் ஏற்றதாகும்.

தொடர்புகளுக்கு
தலைவர்/செயலாளர்
யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்
183, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி. (C-6856)

021 222 3814
077 665 3323



**நாகபூசணி திருமண சேவை**

வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர், அரச உத்தியோகத்தர், வங்கியாளர், ஆசிரியர்கள், தனியார் துறையினர் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பல்லாயிரக்கணக்கில் உள்ளனர். மிகப் பொருத்தமான ஜாதகங்களை உடன் பெற்றுக்கொள்ளலாம்.

264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.

021 222 9306, 071 999 9306, 077 138 7596 (C-6855)



**விற்பனைக்குண்டு**

1 பொக்ஸ் செகண்ட் கார்
2 09 Kw ஜெனரேட்டர்
ஆகியன விற்பனைக்கு உண்டு (16161)

077 773 0567


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## 'மக்களை உடல்.உள பாதிப்புக்கு உள்ளாக்காதீர்கள்'

# குடிமனைப் பகுதியில் தொலைத்தொடர்பு கோபுரம் அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - ஏழாலை தெற்கு, புளியங்கிணற்றடி வீதியில் பொதுமக்கள் நெருக்கமாக வாழும் குடிமனைப் பகுதியில் பொதுமக்களின் எதிர்ப்புக்கு மத்தியிலும் தொலைத்தொடர்பு கோபுரம் அமைக்கப்பட்டு வருவதற்கு எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.





அப்பகுதியிலுள்ள் குடியிருப்பாளர்களால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் தொலைத்தொடர்புக் கோபுரம் அமைக்கப்பட்டு வரும் காணியின் வாயிலில் மேற்கொள்ளப்பட்டது.

அந்தப் பகுதியில் குடியிருக்கும் பெண்கள், குழந்தைகள் உட்பட பெருமளவானோர் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

"மக்களுக்கு மனநோய் வேண்டாம்", "மின்காந்த அலை, காற்றுக்கு நஞ்சு", "மக்களை உடல், உள ரீதியாகப் பாதிப்புக்கு உள்ளாக்காதீர்கள்", "எங்கோ போகும் இடி மின்னலை எம்மை நோக்கி இழுக்க வேண்டாம்", "நகர்த்து நகர்த்து தொடர்பாடல் கோபுரத்தை நகர்த்து" போன்ற சுலோகங்கள் அடங்கிய பாதாகைகளைத் தாங்கியும் கோசங்களை எழுப்பியும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த பகுதியில் நெருக்கமாகக் குடிமனைகளில் கர்ப்பிணிப் பெண்கள், குழந்தைகள் மற்றும் நோயாளர்களும் காணப்படுவதனால் பொதுமக்களுக்குத் தீங்கு விளைவிக்காத வகையில் தொலைத்தொடர்புக் கோபுரத்தை இடமாற்றுமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு முறைப்பாடு செய்த போதும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனாலேயே கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது என அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் தெரிவித்தனர். (ரி-6-33)


### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை துறைமுகம்.பலாலி விமான நிலையம் என்பவற்றுக்கு 1 1/2 Km தூரத்தினுள் 12 மற்றும் 9 பரப்பு காணிகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு-074 234 3241 (சி-2043)


## சிகரெட்டின் விலையும் அதிரடியாக அதிகரிப்பு

(கொழும்பு)

சிகரெட்டின் விலை 25 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டு அதன் புதிய விலை 125 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

புகைப்பிடித்தல் விகிதங்களைக் கட்டுப்படுத்துவதையும் பொதுச் சுகாதாரத்தை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு அரசாங்கம் சிகரெட்டின் விலை உயர்வை நடைமுறைப்படுத்தியுள்ளது.

பொதுச் சுகாதாரம் மற்றும் புகைப்பிடித்தலுக்கு எதிரான பிரசாரங்களை மேற்கொள்ளும் வழக்கறிஞர்கள் இந்த முடிவைப் பாராட்டியுள்ளனர்.

புகைப்பிடித்தல் விகிதங்கள் மற்றும் தொடர்புடைய உடல்நலப் பிரச்சினைகளைக் குறைப்பதில் சாத்தியமான நேர்மறையான தாக்கத்தை எடுத்துக் காட்டுகிறது.

மறுபுறம், விலை உயர்வை விமர்சிப்பவர்கள் இது சட்டவிரோத வர்த்தகம் மற்றும் சிகரெட் கடத்தல் அதிகரிப்பதற்கு வழிவகுக்கும் என்று வலியுறுத்தியுள்ளனர். (ரி)


### மணமகன் தேவை

1992, இந்து.பூரட்டாதி, Software Engineer, பருத்தித்துறை, பதிவு #9326, தரகர் கூலி இல்லை, பதிவுக் கட்டணம் மட்டுமே. WWW.EQMarriage Service.com இணையவழி திருமண சேவை. அழையுங்கள் 076 664 9401. (சி-2042)

### மணமகள் தேவை

1990, இந்து, புனர்பூசம், Robotic Engineer,London, பதிவு #9063, தரகர் கூலி இல்லை, பதிவுக் கட்டணம் மட்டுமே. WWW.EQMarriage Service.com இணையவழி திருமண சேவை. அழையுங்கள் 076 664 9401. (சி-2042)

### மணமகள் தேவை

1995, இந்து . பரணி, Accountant, Australia, பதிவு #9373, தரகர் கூலி இல்லை. பதிவுக் கட்டணம் மட்டுமே. WWW.EQMarriage Service.com இணையவழி திருமண சேவை. அழையுங்கள் 076 664 9401. (சி-2042)

### கோகுலம் திருமண சேவை
KOGULAM MARRIGE SERVICE

**Real Estate Service**

பரியந்தர்வளவு வதிரி, கரவெட்டி | Pariyanthar Valavu Vathiry

தொடர்பு
077 415 4208
077 992 5242

S.நந்தகுமார்: உரிமையாளர்

இல. 5 - 1/4 பிரான்சிஸ் வீதி வெள்ளவத்தை கொழும்பு - 06 | No. 5 - 1/4 Francis Road Wellawatte, Colombo- 06

(1107) RICHWIN

### 12 பரப்பு தேவை
(காலி நிலம் அல்லது வீடு கொண்ட நிலம்)
### மாத வாடகை தேவை

யாழ் நகரிலிருந்து 7கிமீ தொலைவில் யாழ்ப்பாணம் ஏ9 பிரதான வீதியை தேடுவது 12 பரப்பு காணி அல்லது வீடுடன் கூடிய காணி நீண்ட கால குத்தகைக்கு தேவைநிலத்தில் வீடு இருந்தால் அல்லது வன்பொருள் அங்காடியை நடத்துவதற்கு வீடுகள் நன்றாகப் பராமரிக்கப்படுகின்றன. விலைகளை தெரிவிக்கவும்
(தரகர்கள் வரவேற்கப்படுகிறார்கள்)

நிலம் உள்ள உங்கள் நண்பர்களுக்கு தெரியப்படுத்தவும், புகைப்படம் எடுத்து வாட்ஸ்அப்பில் பகிரவும்

**Vajira House Company**
**071 593 3299**



1916 ம் ஆண்டு தொடக்கம், 107 வருட 4 தலைமுறையாக தொடரும் கட்டிட நிர்மாண துறையினர்
வஜிரா ஹவுஸ் நிறுவனம்
23, டீல் பிளேஸ் A, கொள்ளுப்பிட்டி (சி-2041)
Mr. ஷட்ரோன மேலாளர்

### பெயர்மாற்ற அறிவித்தல்

2 ஆம் திட்டம். இளங்கோபுரம். விசுவமடு எனும் முகவரியைக் கொண்ட செந்தமயில் ஆகிய எனது பெயரை இன்று முதல் செந்தமிழ் செல்வி என பெயர்மாற்றம் செய்கின்றேன்.

இனிவரும் காலங்களில் செந்தமிழ் செல்வி எனும் பெயரையே எனது சகல ஆவணங்களிலும் பயன்படுத்துவேன் என இலங்கை சனநாயக குடியரசில் வாழும் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

(1012)

உண்மையுள்ள. ந.செந்தமிழ் செல்வி.


## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 1943 . 06 . 24 | மறைவு 2023 . 06 . 28



அமரர். **சுப்பிரமணியம் தர்மரத்தினம்**

எமது மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தின் தாபக உறுப்பினரும் முன்னாள் முகாமைச்சபை உறுப்பினரும் ஆரம்ப காலம் தொட்டு மிகுந்த நெருக்கடிகளுக்குள்ளும் இல்லக் குழந்தைகளினதும் சிறுவர் இல்லத்தினதும் வளர்ச்சிக்காக மிகவும் அர்ப்பணிப்போடு தன்னலமற்ற சேவையாற்றி மீளாத்துயில் கொண்டுள்ள அமரர். சுப்பிரமணியம் தர்மரத்தினம் அவர்கள் கடந்த 28.06.2023 அன்று இறைவனடி சேர்ந்தமையினையிட்டு ஆறாத் துயரடைகின்றோம்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

எனும் வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க இவ்வுலகிலே அற்புதமான பெருவாழ்வு வாழ்ந்த அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் பிள்ளைகள், உறவினர்களுக்கு சிறுவர் இல்ல சமூகம் சார்பாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரது ஆத்மா சாந்திபெற்று இறையடியில் நித்திய வாழ்வு பெற பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

(சி-6852)

**தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள், இல்லக் குழந்தைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுணாவிலில்...

சேர்ந்த 62 வயதான தனிமையில் வசித்து வந்த நபரொருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது குறித்த மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-7,30)

## பழக்கடை...

குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

“நேற்று முன்தினம் பகல் யாழ்ப்பாணம் நகர பழக்கடையில் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த வியாபாரி மோட்டார் சைக்கிளில் வந்த இருவரினால் இழுத்து ஏற்றி கடத்திச் செல்லப்பட்டு தாக்குதல் நடத்தப்பட்டது.

சம்பவம் தொடர்பில் தாக்குதலுக்குள்ளான பழக்கடை வியாபாரியினால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

சம்பவம் இடம்பெற்று சில மணி நேரங்களிலேயே பழக்கடை வியாபாரியை கடத்திச் சென்று தாக்குதல் நடத்திய நால்வரும் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களிடமிருந்து கடத்தலுக்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிள், கத்தி மற்றும் காணொளிப் பதிவு செய்த விலை உயர்ந்த அலைபேசி என்பன கைப்பற்றப்பட்டன.

குறித்த பழக்கடை வியாபாரி பழம் வாங்கச் சென்ற பெண் ஒருவரை தகாத வார்த்தையால் பேசியுள்ளார்.

அதுதொடர்பில் கேட்கச் சென்றவரின் கழுத்தில் கத்தியை வைத்து பழக்கடை வியாபாரி மிரட்டியுள்ளார். அதனால்தான் அவரை அழைத்துச் சென்று தாக்குதல் நடத்தினோம் என்று சந்தேகநபர்கள் வாக்குமூலம் வழங்கியுள்ளனர்” என்று பொலிஸார் தெரிவித்தனர். (4-7)

## மாற்றுத் திட்டம்...

கடன் மறுசீரமைப்பு திட்டத்தை தவிர்த்து சிறந்த மாற்றுத்திட்டத்தை முன்வைத் தால் ஜனாதிபதியிடம் கலந்துரையாடி அதனை விரைவாக செயற்படுத்த தயார் என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற தேசிய கடன் மறுசீரமைப்பு செயற்றிட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

2022ஆம் ஆண்டு நாடு முழுவதும் எரிபொருள், எரிவாயு ஆகியவற்றுக்கான வரிசை யுகம் நீடித்திருந்தது. நாளாந்தம் பல மணித்தியாலங்கள் மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டது. இவ்வாறான பின்னணியில் 97 சதவீதமாக காணப்பட்ட பணவீக்கத்தை 2023ஆம் ஆண்டு இறுதி பகுதியில் ஒற்றை இலக்கத்துக்கு கொண்டு வருவதாக மக்களுக்கு வாக்குறுதி வழங்கினோம். தற்போது பணவீக்கம் கட்டம் கட்டமாக குறைவடைந்து செல்கிறது.

பொருளாதார பாதிப்பு ஓரிரு நாட்களில் இடம்பெற்றதொன்றல்ல. 2019 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஒருதரப்பினரது ஆலோசனைக்கு அமைய வரிச் சலுகை வழங்கினார். உரம் தொடர்பில் தவறான தீர்மானத்தை எடுத்தார். இதனால் பொருளாதாரம் சடுதியாக வீழ்ச்சியடைந்தது.

பொருளாதார கொள்கையை அரசியல் தேவைகளுக்காக மாற்றியமைத்ததால் நாடு என்ற ரீதியில் வீழ்ச்சியடைந்தோம். இதனால் 16 தடவைகள் சர்வதேச நாணய நிதியத்தை நாட வேண்டியிருந்தது. தற்போது வங்குரோத்து நிலையடைந்துள்ள பின்னணியில் 17ஆவதுதடவையாகஒத்துழைப்பை பெற்றுக்கொண்டுள்ளோம்.

நாடு வங்குரோத்து நிலை அடைந்துள்ளமைக்கு 225 உறுப்பினர்களும் பொறுப்புக்கூற வேண்டும். ரணில், ராஜபக்ஷ, மைத்திரி என தொடர்ச்சியாக ஆட்சியில் இருந்த சகல அரசாங்கங்களின் அமைச்சரவையில் இருந்தவர்களில் பெரும்பாலானோர் இன்று எதிர்க்கட்சி பக்கமும், ஆளும் தரப்பு பக்கமும் உள்ளார்கள். ஆகவே எவரும் பொறுப்பில் இருந்து விலக முடியாது.

கடன் மறுசீரமைப்பை தவிர சிறந்த மாற்றுத்திட்டம் ஏதும் இருந்தால் எதிர்க்கட்சிகள் தாராளமாக முன்வைக்கலாம். அவ்வாறான யோசனைகளை நிதியமைச்சரான ஜனாதிபதியிடம் முன்வைத்து மறுகணமே கடன் மறுசீரமைப்பு யோசனையை மாற்றியமைக்கிறேன் என்றார். (4-7)

## கடன் மறுசீரமை...

வழங்குவதற்கான பிரேரணையாக இது தொடர்பான பிரேரணை சபைத் தலைவரான அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

காலை முதல் இரவு 7.30 மணி வரை விவாதம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து வாக்கெடுப்பு நடைபெற்றது.

மருதப்பாண்டி ராமேஸ்வரன், ஏ.எல்.எம்.அதாவுல்லா, வடிவேல் சுரேஷ், டக்ளஸ் தேவானந்தா, வியாழேந்திரன் ஆகியோர் இதற்கு ஆதரவாக வாக்களித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் உத்தர லங்கா சபாகய முதலான கட்சிகள் குறித்த யோசனைக்கு எதிராக வாக்களித்தன.

அத்துடன் தமிழ் தேசியகூட்டமைப்பு மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளும் எதிராக வாக்களித்திருந்தன.

## மதுபானங்களின்...

நிலையில் இந்த விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அத்திணைக்களம் அறிவித்துள்ளது. (4-7)

## பிரான்ஸ்...

பிரான்ஸில் போராட்டங்களில் ஈடுபட்டதாக சந்தேகத்தின் பேரில் இதுவரை 13,000 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், போராட்டத்தை கட்டுப்படுத்த 45,000 பொலிஸார் குவிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

பாரிஸில்கடந்த செவ்வாய்க்கிழமை 17 வயது சிறுவன் பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இச்சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டதுடன், அங்கு வன்முறை சம்பவங்களும் பதிவாகி வருவதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.(4-7)

## 400...

சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

400 மில்லியன் டொலர்கள் பெறுமதியான இந்த

முக்கிய திட்டமானது 120,000 மெட்ரிக் தொன் சீனியை உற்பத்தி செய்வதன் மூலம் இலங்கையின் சர்க்கரைத் தேவையின் கணிசமான பகுதியை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

200 ஹெக்டேயர் பரப்பளவில் குறுங்காடுகளால் சூழப்பட்ட இந்த நிலம், பசுமை வயல் சர்க்கரை மேம்பாட்டுத் திட்டத்திற்கு அடித்தளமாக நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்கப்படவுள்ளது. (4-7)

## வவுனியாவில்...

பிக்கப்படவுள்ளன.

குருந்தூர் விகாரை பிக்கு கல்கமுவ சந்தபோதி தேரர் தலைமையில் இராணுவத்தால் இந்த விகாரை கட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (4-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 01/07/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1617
துலாம் 6 0 1 8 7 8
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.07.01
சீட்டிழுப்பு இலக்கம் - 1192
S 16 33 44 71

கொவிசெத
திகதி 2023.07.01
சீட்டிழுப்பு இலக்கம் 3404
G 17 45 46 63
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 01/07/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1510
R 19 30 41 50 60

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.07.01
சீட்டிழுப்பு இலக்கம் 471
துலாம் 01 06 48 55 துலாம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/07/01
சீட்டிழுப்பு இலக்கம் 5162
H 7 5 7 8 7 6
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2136
நிறம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.07.01
தினம் சனிக்கிழமை
N 01 45 62 72
வெல்லப்பட்ட மொத்தம் பரிசுத் தொகை ரூ. 3,647,620/-
DLB

சனிதா
சனிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி:2023.07.01
வெற்றி வாரம் : 4297
வர்ணம்: இளம் பச்சை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 31,735,049.10
03 09 31 54 J
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,202,272/-
திகதி 2023-07-01
வெற்றி வாரம் 3848
வர்ணம் இள நீலம்
28 40 53 56
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,798,240/-
DLB

Z 18 31 45 46 60
1312
சிவப்பு
2023.07.01
சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 342,430,077.40
DLB DEVELOPMENT LOTTERIES

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 607
திகதி 2023-07-01
வர்ணம் ஆரஞ்சு நிறம்
M 03 15 27 04
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 24,339,440.00
DLB DEVELOPMENT LOTTERIES
தொ. பே.: 0112 333 548/47
Web: www.dlb.lk

அட கோடீபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம் : 1962
வர்ணம் : மஞ்சல்
சீட்டிழுப்பு திகதி : 2023.07.01
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 54,748,013.40
11 31 53 60 W
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார மீட்சியில் இலங்கையுடன் இணைந்திருப்போம்

## கனேடிய உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு

(கொழும்பு)

பொருளாதார மீட்சியை நோக்கிய இலங்கையின் பயணத்தில் கனடா தொடர்ந்தும் இலங்கையுடன் இணைந்திருக்கும் என்று இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஸ் தெரிவித்துள்ளார்.

கனடா கூட்டமைப்பின் 156 ஆவது ஆண்டை முன்னிட்டு நேற்று கொண்டாடப்பட்ட கனடா தினத்துக்கான வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

முன்னெப்போதும் இல்லாத கடினமான ஒரு பொருளாதார நெருக்கடியால் இலங்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இதற்காக கனடா பொருளாதார உதவி என்ற ரீதியில் தமது பங்களிப்பை வழங்கி வருகிறது.

அதேநேரம் அர்த்தபூர்வமான, நீடிக்கும் தேசிய நல்லிணக்கத்தை நோக்கிய இலங்கையின் முயற்சிகளுக்கு தமது சொந்த அனுபவங்களிருந்து ஆதரவளிப்பதற்கும் கனடா தயாராகவிருப்பதாக கனேடிய உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டுள்ளார். (நி)


-சிரேஷ்ட விற்பனை நிறைவேற்று அதிகாரி-
வெளிப்புற மோட்டார் விற்பனைகள்
(Outboard Motors - OBM)

YAMAHA

தேவைப்படும் முக்கிய தகைமைகள்:

- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் துறையில் டிப்ளோமா தகைமையைப் பெற்றிருத்தல்.
- ஆகக் குறைந்தது 3 வருட கால விற்பனை அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். ஒரே தொழில் துறையில் 1 - 2 வருட கால அனுபவத்தைக் கொண்டிருப்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- சிறந்த தொடர்பாடல் மற்றும் பேச்சாற்றல் திறனைக் கொண்டிருத்தல். அழுத்தம்மிக்க சந்தை நிலைமைகளில் செயலாற்றக் கூடிய திறனைக் கொண்டிருத்தல்.
- செல்லுபடியாகும் சாரதி (மோட்டார் சைக்கிள் / வாகனம்) அனுமதிப் பத்திரத்தைக் கொண்டிருத்தல்.
- வட மாகாணப் பகுதிகளில் விற்பனைகளை மேம்படுத்தக்கூடிய ஆளுமையைக் கொண்டிருத்தல்.
- செயலாற்றுகையின் அடிப்படையில் மற்றும் பயன்மிக்க குழுவாக இயங்கக்கூடிய ஆற்றலைக் கொண்டிருத்தல்.

பிரதான கடமைகள் மற்றும் பொறுப்புக்கள்:

- மாதாந்த விற்பனை இலக்குகளை திட்டமிடல் மற்றும் நிறைவேற்றுதல்.
- மாதாந்த வேலைக் கள விஜயத்தைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தல். முறைப்பாடுகளை கையாளுதல் மற்றும் அது தொடர்பான ஆவணங்களை பராமரித்தல்.
- விற்பனை முகவர்களை முகாமை செய்தல் மற்றும் 3S வலையமைப்பு பங்காளர்களுடன் வர்த்தகக் குறியீடுகளை ஒருங்கிணைத்தல்.
- மீனவச் சமூகத்தினர், தனியார் தொழிநுட்பவியலாளர்கள் மற்றும் நிதி வழங்குனர்களுடன் சுமுகமான உறவைக் கட்டியெழுப்புதல் மற்றும் முறையாக பேணிவரல்.
- வர்த்தகக் குறியீடுகளை ஊக்குவித்தல் மற்றும் விற்பனைக்கு பின்னரான சேவை நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கமைத்தல்.
- இருப்புக்களை முறையாகப் பராமரித்தல் மற்றும் குறித்த முகவர்கள் / பிரதேசங்களிலிருந்து கடன்களை முறையாக வசூலித்தல்.
- போட்டி வணிகங்களின் வணிக உபாயங்கள் / உற்பத்திகள் மீது அவதானமாக இருத்தல் மற்றும் உயர் மட்ட முகாமையாளர்கள் உபாயத் திட்டங்களை வகுப்பதற்காக மேற்படி சேகரிக்கப்பட்ட தகவல்களை கீழ் மட்ட முகாமையாளர்களுடன் கலந்துரையாடுதல்.

இந்தத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் உங்களுடைய சுய விபரங்களடங்கிய விண்ணப்பத்தை கீழ் குறிப்பிடப்படும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள்.

amw.careerswithus@amwltd.com

பதிவுத் தபால் மூலம் கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கும் அனுப்ப முடியும்.

(C-2040)

AMW bringing the world to you

முகாமையாளர் - ஆட்சேர்ப்பு
அஸோஸியேட் மோட்டர்வேஸ் (தனியார்) கம்பனி
185, யூனியன் பிளேஸ், கொழும்பு 02



-தொழிநுட்ப உதவி நிறைவேற்று அதிகாரி-
கிழக்கு மற்றும் வட மாகாணங்கள்
(வெளிப்புற மோட்டார்கள் Outboard Motors)

YAMAHA

பிரதான கடமைகள் மற்றும் பொறுப்புக்கள்

- தொழிநுட்பம் சார்ந்த முறைப்பாடுகள் மற்றும் துரிதமாக தீர்மானங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.
- வெளிப்புற மோட்டார் என்ஜின்கள் தொடர்பான உத்தரவாத மாதிரிப் பரிசோதனைகளை திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.
- வாடிக்கையாளர் விழிப்புணர்வு அமர்வுகளை நடாத்துதல்.
- சேவை வலையமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டங்களை இனங்காணுதல் மற்றும் சமூகமளித்தல்.
- AMW வலையமைப்பிலுள்ள உத்தரவாத அதிகாரமளிப்பு மற்றும் நேரடி உத்தரவாத முறைப்பாடுகளை கையாளுதலும், சமூகமளித்தலும்
- வாடிக்கையாளர்கள் மற்றும் விற்பனை ஊழியர்களுக்கு தேவையான எச்சந்தர்ப்பத்திலும், 24/7 நேர தொழிநுட்ப சேவைகளை வழங்குதல்.

முக்கிய தகைமைகள்:

- செல்லுபடியாகும் சாரதி (மோட்டார் சைக்கிள் / வாகனம்) அனுமதிப் பத்திரத்தைக் கொண்டிருத்தல். மற்றும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண கரையோரப் பிரதேசங்களில் வாகனங்களைச் செலுத்துவதற்கு முடியுமானவராக இருத்தல்.
- வெளிப்புற மோட்டார் தொழிநுட்ப கோளாறுகளை திருத்தம் செய்யக்கூடிய தகைமை பெற்ற தொழிநுட்ப அதிகாரியாக இருத்தல்.
- கடற்துறை பொறியியல் தொடர்பான டிப்ளோமா அல்லது அதனையொத்த உயர் கல்வி தகைமையைக் கொண்டிருத்தல் மேலதிக அனுகூலமாகக் கருதப்படும்.
- வெளிப்புற மோட்டார் தொழிநுட்ப அதிகாரியாக (பூரண அல்லது பகுதியளவு திறமையுடைய) 2 - 4 ஆண்டுகள் அனுபவத்தைக் கொண்டிருத்தல்.
- அழுத்தமான வேலைச் சூழலில் பணி புரியக்கூடிய ஆற்றல் மற்றும் சிறப்பான ஆளிடைத் தொடர்பு திறன் மற்றும் தூர பயணங்களுக்கு விருப்பமுடையவராக இருத்தல்.
- சிறந்த பேச்சாற்றல் மற்றும் தமிழ், ஆங்கில மொழித் தேர்ச்சி அவசியம்

இந்தத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் உங்களுடைய சுய விபரங்களடங்கிய விண்ணப்பத்தை கீழ் குறிப்பிடப்படும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள்.

amw.careerswithus@amwltd.com

பதிவுத் தபால் மூலம் கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கும் அனுப்ப முடியும்.

(C-2039)

AMW bringing the world to you

முகாமையாளர் - ஆட்சேர்ப்பு
அஸோஸியேட் மோட்டர்வேஸ் (தனியார்) கம்பனி
185, யூனியன் பிளேஸ், கொழும்பு 02


# இராசிபலன்

02.07.2023
ஆனி 17, ஞாயிற்றுக்கிழமை
சதுர்த்தசி முன்னிரவு 7.47 மணிவரை
கேட்டை பிற்பகல் 12.46 மணிவரை

சுபநேரம் -8.56-10.26 மணிவரை
இராகுகாலம்-4.26-5.56 மணிவரை
நயினை நாகபூசணி அம்மன் தேர்

சந்திராஷ்டமம்-
பரணி, கார்த்திகை

வளவன்

**மேஷம்** அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**ரிஷபம்** தடைப்பட்ட காரியங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், சோம்பலை விலக்குவது நல்லது.

**மிதுனம்** பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**கடகம்** பல நாட்களாக செய்ய நினைத்த வேலையொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், கடன்சுமை குறைய வழிவகை செய்வீர்கள், பகையொன்று நட்பாகலாம்.

**சிம்மம்** பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, பிள்ளைகள் வழியில் பெருமைகள் வந்து சேரலாம்.

**கன்னி** கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், சுபநிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்** உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** அனைத்திலும் வெற்றி பெற வழிபாட்டை மேற்கொள்ள வேண்டிய நாள், நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

**தனுசு** குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது, உடல் நலனில் கவனம் தேவை, சவால்களைச் சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், சோம்பலை விலக்குவது நல்லது.

**மகரம்** தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், குடும்ப பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.

**கும்பம்** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், எதிர்பார்த்த தன வரவுகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**மீனம்** மற்றவர்கள் மத்தியில் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், காரிய அனுகூலமுண்டு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அன்பு அளிக்கும் நீதி அடிபணிதல், சட்டம் அளிக்கும் நீதி தண்டனை.



கூத்துக்கலைச்செம்மல் சவிரிமுத்து மிக்கேல்தாஸின் 'குமரிக்கண்டமும் சங்கத் தமிழும்' நூல் வெளியீட்டு நிகழ்வு யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. (படம்: சிவசாந்தன்)






யா/மானிப்பாய் மகளிர் கல்லூரியின் 60 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு நேற்று முன்தினம் பாடசாலை சமூகத்தால் நடைபவனி முன்னெடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பழைய மாணவர்களும் கலந்து கொண்டனர்.

# தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளின் அதிபர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்திற்கு உட்பட்ட வகை -II, வகை - III பாடசாலைகளுக்குரிய அதிபர் பதவிக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இப்பதவிக்கு வடமாகாணத்தில் கடமையாற்றுகின்ற இலங்கை அதிபர் சேவை வகுப்பு -II ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் மற்றும் வகுப்பு III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து யா/எழுதுமட்டுவாழ் அ.த.க பாடசாலை, யா/மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயம் (வகைII), யா/கரம்பகம் அ.த.க.பாடசாலை, யா/குடமியன் அ.த.க பாடசாலை, யா/கல்வயல் சண்முகானந்தா வித்தியாலயம் மற்றும் யா/கோவிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலயம் (வகை - III) .மேற்குறித்த பாடசாலைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

வகை-II பாடசாலைகளுக்கு இலங்கை அதிபர் சேவையில் வகுப்பு III ஐ உடையவர்களாக இருத்தல் வேண்டும். மற்றும் மாகாணக்கல்வி அமைச்சின் "அதிபர் வெற்றிடம் நிரப்புதல்" சுற்றுநிருப இல 2022/01 இற்கு அமைய தெரிவு மேற்கொள்ளப்படும்.

எனவே விண்ணப்பிக்க விரும்புவோர் தத்தமது வலயக்கல்வி அலுவலகங்களில் விண்ணப்பங்களைப் பெற்று வலயக்கல்விப் பணிப்பாளரின் சிபாரிசுடன் எதிர்வரும் 20.07.2023 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக "வலயக்கல்வி அலுவலக கல்விப் பணிப்பாளர் தென்மராட்சி, சாவகச்சேரி" என்ற முகவரிக்குப் பதிவுத் தாபாலில் அனுப்பி வைக்குமாறு தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கிருபாகரன் அறிவித்துள்ளார். (நி-6)

# போதனா மருத்துவமனைக்கு விஜயம் மேற்கொண்ட மைத்திரி



(சாவகச்சேரி)

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று சனிக்கிழமை காலை விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு கட்டடம், மருத்துவமனையில் உள்ள மருத்துவ அருங்காட்சியகம் உள்ளிட்ட பிரிவுகளை பார்வையிட்டதுடன் நோயாளர்கள் மற்றும் மருத்துவமனை ஊழியர்களுடனும் கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது போதனா பணிப்பாளர் மருத்துவர் சத்தியமூர்த்தி மற்றும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் உள்ளிட்ட சுதந்திரக்கட்சியின் பிரமுகர்கள் கலந்து கொண்டிருந்தனர். (நி-6-30)




அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும்

## இசை வேள்வி -2023

இறுதி நாள் நிகழ்வுகள்



**இசை ஆராதனை**

காலம் - 02.07.2023 ஞாயிறு
நேரம் - காலை 9.30 மணி
இடம் - நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணிமண்டபம்



**மங்கல விளக்கேற்றல்**

மூத்த மங்கல இசைக்கலைஞர்கள்
திரு. எம்.பி. பாலகிருஷ்ணன்
திரு.கே.ஆர். சுந்தரமூர்த்தி
திரு.கே.ஆர். புண்ணியமூர்த்தி
திரு.வி.கே. பஞ்சமூர்த்தி
திரு.ஆர்.கேதீஸ்வரன்

**கடவுள் வாழ்த்து**
திரு. சிவஞானசுந்தரம் யூட்

**தலைமையுரை**
திரு.த.முகுந்தன்
(உடுவில் பிரதேச செயலர்).

**வாழ்த்துரை**
பேராசிரியர் அ.சண்முகதாஸ்
(வாழ்நாட் பேராசிரியர்,
யாழ்.பல்கலைக்கழகம்.)

**மாலை நிகழ்வுகள்**

காலம் - 02.07.2023 ஞாயிறு
நேரம் - மாலை 5.00 மணி
இடம் - நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணிமண்டபம்




**திருநாள் மங்கலம்**

மங்கல விளக்கேற்றல்
திரு.ஏ.பி.ஜெயராசா தம்பதியர்
(பங்காளர், வெள்ளவத்தை நித்தியகல்யாணி ஜுவலரி.)
கடவுள் வாழ்த்து
திருமதி. சந்திரிகா சுஜித்குமார்.
தலைமையுரை
கலாநிதி. ஆறு.திருமுருகன்
(தலைவர், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்)




**இசையரங்கு**

பாட்டு - செல்வி பரமேஸ்வரி கணேசன்
வயலின் - எஸ்.திபாகரன்
மிருதங்கம் - பி.ரமண சர்மா
கஞ்சிரா - ஞா.வசந்

**இசைப் பேரரங்கு**

பாட்டு - ஸ்ரீமதி அருணா சாய்ராம்
வயலின் - வி.எஸ்.கோகுல்
மிருதங்கம் - டெல்லி எஸ்.சாய்ராம்
கடம் - எஸ்.கிருஷ்ணா


# கெற்பேலி கிழக்கு தரவையம்பதி வீரபத்திரேஸ்வரர் ஆலய மஹோற்சவம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி மிருசுவில் கெற்பேலி கிழக்கு தரவையம்பதி ஸ்ரீ வீரபத்திரேஸ்வரர் ஆலயத்தின் மஹோற்சவப் பெருவிழா நாளை திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

அந்தவகையில் எதிர்வரும் 12 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் 13 ஆம் திகதி வியாழக்கிழமை கடல் தீர்த்தத் திருவிழாவும் மறு நாள் வெள்ளிக்கிழமை பட்டுத் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறவுள்ளன என ஆலய பிரதம குருவைரவநாத பரமாச் சாரியார் அறிவித்துள்ளார்.

மேலும் தேர்த் திருவிழா தினத்தன்று வாகன ஒழுங்குகள் செய்யப்பட்டிருப்பதாகவும் அடியவர்களுக்கு அறியத்தரப் பட்டுள்ளது. (நி-6-30)

# கல்வயல் ஆண்டான்குளம் இளைஞர்களால் புனரமைப்பு

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வயல் பகுதியில்200 வருடங்கள்பழைமை வாய்ந்த ஆண்டான்குளம் இளைஞர்களின் முன்மாதிரியான செயற்பாட்டினால் புனரமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி குளம் முற்றுமுழுதாக கைவிடப்பட்டிருந்த நிலையில் கல்வயல் இளைஞர்கள், கல்வயல் சமூக சேவா சங்கம் ஊடாக குளத்தினை புனரமைப்புச் செய்து பராமரித்து வருகின்றனர்.

"கோவில்களைப் போன்று குளங்களும் எம் மரபுரிமையே. ஆறுகள் அற்ற யாழ்ப்பாணத்திற்கு குளங்களே மூலாதாரம்" என்ற சிந்தனைக்கமைவாக கல்வயல் இளைஞர்கள் மேற்படி நற்காரியத்தில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(நி-6-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

நாதம் 404

Viber 076 636 3378



# ஒன்றுபட்டாலே உரிமைகிட்டும்!

**“ அங்கு, அணுகுண்டினால் பாதிப்படைந்த ஜப்பானியர்கள் ஒன்று சேர்ந்து ஒற்றுமையால் தமது நாட்டை மீட்டெடுத்தார்கள்.**

**இங்கு ஆட்சியாளர்களினால் கொன்றொழிக்கப்பட்ட தமிழினம் ஒற்றுமைப்படாது பிரிந்து நின்று தனது ஆட்சி அதிகாரங்களை பெற்றுக் கொள்ள முட்டி மோதிக் கொண்டிருக்கிறது. ”**

ஒரு இனத்துக்கான மீட்சி என்பது கூட்டு முயற்சி இன்றி கடைசிவரை வந்துவிடாது.

ஜப்பான் நாட்டின் கிரோஷிமா, நாகசாயி எனும் இரண்டு நகரங்கள் மீது அமெரிக்காவினால் அணுகுண்டு வீசப்ப ட்டது.

ஜப்பானின் கதை அவ்வளவு தான் என உலக நாடுகள் திகைத்து நின்றன.

அத்துடன் அமெரிக்கா தானே இந்த உலகின் வல்லரசு என மார் தட்டி மமதை கொண்டு கர்ச்சித்தது.

ஜப்பான் மீதான அணுகுண்டு தாக்குதல் அந் நாட்டை பெரிதும் பொருளாதாரச் சிக்கலுக்குள் தள்ளியது.

ஆனால் ஜப்பான் மக்கள் மனம் சோரவில்லை. யார் தம் மீது அணுகுண்டு வீசினார்களோ, யார் எம்மை அழிக்க நினைத்தார்களோ அவர்கள் எம்மை அண்ணார்ந்து பார்க்கும் அளவுக்கு நாம் பொருளாதார ரீதியில் வளர வேண்டும் என தமக்குள் திடசங்கற்ப்பம் பூண்டனர்.

நாம் ஜப்பானியர் என்ற ஒற்றை வார்த்தை கொண்டு உழைத்தனர். இன்று உலகின் உற்பத்திப் பொருட்களில் மிக தரம் வாய்ந்த பொருட்களைத் தயாரிக்கும் நாடு என்ற உச்சத்தில் இருக்கிறது ஜப்பான்.

அணுகுண்டுத் தாக்குதலுடன் அந் நாடு முடங்கியிருந்தால் இன்று எத்தியோப்பியா நாட்டிலும் மிக வறுமைப்பட்ட நாடாக இருந்திருக்கும்.

ஜப்பானின் வளர்ச்சி, வெற்றி என்பது அந் நாட்டு மக்களின் ஒற்றுமை என்ற ஒற்றை வார்த்தையினால்தான் சாத்தியமானது.

என்ன அபிமன்யு இப்போது எதற்காக ஜப்பான் நாட்டைப் பற்றி வகுப்பெடுக்கிறீர்கள் என நீங்கள் முணுமுணுப்பது புரிகிறது.



ஜப்பான் மக்களின் ஒற்றுமைக்கும் ஈழத் தமிழினத்திற்கும் ஒற்றுமையுண்டு. ஜப்பானியர்கள் அணுகுண்டின் தாக்கத்தால் அனுபவித்ததை விட பல மடங்கு வலியை ஈழத் தமிழினம் அனுபவித்தது. ஆனாலும் அந்த இனத்தின் வலியை சர்வதேசம் உணர மறந்துவிட்டது.

ஈழத் தமிழினம் பட்ட இன்னல்கள் கொஞ்ச நஞ்சமல்ல. அந்தளவிற்கு வார்த்தைகளால் கூறிவிட முடியாத அளவிற்கு பல கொடுமைகளை அந்த இனம் அனுபவித்த தான வரலாறுகள் பதிவாகியிருந்த போதிலும் தமிழினத்துக்கான நீதி இதுவரை வழங்கப்பட வில்லை என்பது தான் வேதனை.

கிரோஷிமா, நாகசாயி நகரங்களில் அணுகுண்டை வீசியது அமெரிக்கா.

ஆனால் வன்னிப் பெரு நிலப்பரப்பில் தமிழினத்தை கொன்று குவித்தது அந்த மக்களின் சொந்த நாட்டு அரசாங்கம் என்பதே ஜீரணிக்க முடியாதது.

பல்லாயிரக்கணக்கான அப்பாவிப் பொது மக்கள் கொன்றொழிக்கப்பட்டதன் பின் போர் நிறைவு பெற்றுவிட்டது என ஆட்சியாளர்கள் அறிவித்தனர்.

வட-கிழக்கில் ஈழத்தமிழினத்தின் வீடுகளில் ஒப்பாரி ஒலி ஒலித்துக் கொண்டிருந்த போது தெற்கில் கொண்டாட்டங்கள் விண்ணை முட்டின.

வீதிகளில் பால்சோறு பொங்கி ஒருவருக்கொருவர் ஊட்டி விட்டு கழிப்புற்றனர்.

இந்த வேறுபாடே இலங்கை இன்று இந் நிலையில் இருப்பதற்குக் காரணம் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டியவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

போர் நிறைவுற்றதன் பின்னராவது ஈழத் தமிழினத்துக்கான நீதி கிடைத்ததா எனின் அல்ல என்ற பதிலே மேலோங்கி நிற்கும்.

ஆட்சி மாற்றங்கள் மாறி மாறி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால் ஈழத் தமிழரின் அரசியல் தீர்வு விடயத்தில் அனைத்து ஆட்சியாளர்களின் போக்கும் ஒரே மாதிரியானவையாகவே காணப்படுகின்றது.

ஆட்சியாளர்களின் இப்போக்கிற்கு ஈழத் தமிழ் அரசியல் தலைவர்களும் பெரும் பொறுப்பாளிகள் ஆகின்றனர்.

ஆம், ஈழத் தமிழினத்திற்கு அவர்களால் வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்ற ஆட்சியாளர்களை அழுத்தினரா? எனின் அதற்கான பதில் கிடைத்து விடும்.

அதை விடுத்து ஆட்சியாளர்களின் தாளத்திற்கு ஆடும் பொம்மைகளாக மாறியிருப்பதும் வேதனை தரவல்ல விடயமே.

தவிர தமது அரசியல் ஆதாயங்களுக்காக மற்றவர்களைப் பிரித்தாளும் செயற்றிட்டத்தை மிகத் தீவிரமாகச் செய்து வருகின்றனர். இதற்கு இன்று வரை தமக்குள் ஒற்றுமைப்படாமல் கட்சி ரீதியாகவும் கொள்கை ரீதியாகவும் பிரிந்து நிற்பதை உதாரணமாகக் கூறிவிட முடியும்.

உங்கள் சிந்தனை தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதே எனின் உங்கள் கொள்கைகளுக்குள் எப்படி முரண் ஏற்படும்.

முரண் கொள்கைகளிலா அல்லது கொள்கைகளை வகுத்தவர்களிலா என்ற கேள்வியும் இங்கு எழும்.

அதற்கு சுய நல அரசியல் என்பது பதிலாய் விரிந்து நிற்கும். அண்மையில் வெளிநாட்டு சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படாமல் தமிழினத்திற்கான அரசியல் தீர்வை வழங்க முடியாது எனத் தெரிவித்திருந்தார்.

அதாவது தமக்குள் கட்சி ரீதியாகவும், கொள்கை ரீதியாகவும் முரண்டு பிடிக்கும் தமிழ் கட்சிகள் ஒன்று பட்டால் மாத்திரமே தமிழினத்துக்கான அரசியல் தீர்வை வழங்கலாம் எனத் தெரிவித்திருந்தார்.

இது வரை காலமும் ஜனாதிபதி கூறாத புதிய விடயத்தை தற்போது கூறியிருக்கிறார். தமிழினத்துக்கான அரசியல் தீர்வை தந்தே தீருவேன் எனக் கூறிய ஜனாதிபதி தற்போது தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்தாலே தமிழினத்துக்கான அரசியல் தீர்வு சாத்தியமாகும் எனத் தெரிவித் திருக்கிறார்.

தமிழ் கட்சிகள் ஒருபோதும் ஒன்றிணையாது என்பதை மிகத் தெளிவாகத் தெரிந்து கொண்ட ஜனாதிபதி இவ்வாறு கூறியதற்குள் இருக்கும் பொருளையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒற்றுமை இல்லாது பிரிந்து நின்றால் எம்மை பிரித்தாளும் சக்திகளுக்கு அது சாதகமான முடிகளையே தரும் என்பது நிதர்சனம்.

அங்கு அணுகுண்டினால் பாதிப்படைந்த ஜப்பானியர்கள் ஒன்று சேர்ந்து ஒற்றுமையால் தமது நாட்டை மீட்டெடுத்தார்கள்.

இங்கு ஆட்சியாளர்களினால் கொன்றொழிக்கப்பட்ட தமிழினம் ஒற்றுமைப்படாது பிரிந்து நின்று தனது ஆட்சி அதிகாரங்களை பெற்றுக் கொள்ள முட்டி மோதிக் கொண்டிருக்கிறது.

**அபிமன்யு**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்களில் சாத்திரியார் சதாசிவத்தைத் தவிர மற்றெல்லோரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து சிறிது நேரம் ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க மூப்பர் குரல் கொடுத்தார்.

**மூப்பர்:-** அது சரி, எங்க இன்னமும் சாத்திரியாரைக் காணவில்லை. என்ன சங்கதியோ.

**கங்காணி:-** சாத்திரியார் தன்ர புங்குடுதீவு கண்ணகை அம்மன் கோயிலுக்குப் போனவரல்லோ. இனி இண்டைக்கு நயினாதீவு நாகபூசணி அம்மனின்ர தேர். அங்கயும் போய்ற்றுத்தான் வருவார்.

**பண்டிதர்:-** நானும் புங்குடுதீவு கண்ணகை அம்மன் கோவில் கும்பாபிஷேகத்துக்குப் போனனான்.

மிகப் பிரமாண்டமான முறையில கோயில் கட்டப்பட்டிருக்குது.

**வாத்தியார்:-** கோவில் கட்டுமானத்தில 500 தூண்கள் நிறுத்தப்பட்டிருக்குதெண்டால், அந்தக் கோவிலின் கட்டுமானம் எப்படி எண்டு பாருங்களன்.

**பண்டிதர்:-** அது மட்டுமல்ல, கும்பாபிஷேகத்தில குதிரைகள், யானைகள் என ஒரே விழாக்கோலம்.

அதோட, உலங்கு வானூர்தியும் பூமாரி சொரிந்து கும்பாபிஷேகத்தைப் பக்தி பூர்வமாக ஆக்கியது.

**சிறாப்பர்:-** நீங்கள் இதைச் சொல்லுறியள் புங்குடுதீவைச் சேர்ந்த ஒருவர் வெளிநாட்டில இருந்து கொழும்புக்கு வந்து, பின்னர் கொழும்பில இருந்து ஹெலிகொப்ரரில புங்குடுதீவு கண்ணகை அம்மன் கோவிலுக்கு வந்தவராமல்லோ.

**கங்காணி:-** அட சங்கதி அப்படியோ.

**பண்டிதர்:-** புங்குடுதீவைச் சேர்ந்த மக்களில பெரும்பாலானவர்கள் வெளிநாட்டில தானே இருக்கினம். அவையள் முழுப் பேரும் கண்ணகை அம்மனின்ர கும்பாபிஷேகத்திற்கு வந்தவையள்.


**வாத்தியார்:-** என்ன இருந்தாலும் புங்குடுதீவு மக்கள் தங்கட கண்ணகை அம்மன் கோவிலுக்கு யாழ்ப்பாணம் உள்ளிட்ட பல இடங்களில இருந்து மக்களை வரவழைச்சுப் போட்டினம். அது மிகப் பெரும் சாதனை தான்,

**மூப்பர்:-** ஓ! இனி தீவகத்திற்குச் செல்கிறவர்கள், தங்கட தரிசிப்பில புங்குடுதீவு கண்ணகை அம்மன் கோவிலையும் குறிச்சு வைச்சிருப்பினம்.

**வாத்தியார்:-** உண்மை தான். அநேகமான கோயில்கள் நீதிமன்றங்களில தீர்ப்புக்காகக் காத்திருக்கிற இந்தக் கால சூழலில, ஒரு பெரும் கோவில் திருப்பணியைச் சிறப்பாகச் செய்து ஒற்றுமையாக அந்தக் கோவிலின் கும்பாபிஷேகத்தையும் செய்த புங்குடுதீவு மக்களைப் பாராட்டத்தான் வேணும்.

**பண்டிதர்:-** கும்பாபிஷேகத்தில அன்னதானம், தாகசாந்தி, குளிர்பானம் என ஏகப்பட்ட வரவேற்பு.

**சிறாப்பர்:-** உண்மை தான். எங்கட பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா அவர்கள் சொல்லுறது மாதிரி; பண்ணைக்கு அங்கால தான் விருந்தோம்பல் பண்பாடு என்பதை புங்குடுதீவு மக்கள் நிரூபித்துப் போட்டினம்.



**புங்குடுதீவு மக்கள் சேர்ந்து தீவகத்தில ஒரு பிறைவேற் பல்கலைக்கழகத்தை...**

**மூப்பர்:-** இவ்வளவு வசதி வாய்ப்பாக இருக்கிற புங்குடுதீவு மக்கள் தீவகத்தில ஒரு தரமான பிறைவேற் பல்கலைக்கழகத்தை அமைத்து எங்கட பிள்ளைகளின்ர பட்டப் படிப்புகளுக்கு உதவலாமல்லோ.

**கங்காணி:-** ஏன்? புங்குடுதீவு கண்ணகை அம்மன் ஆலயத்தாலேயே ஒரு பிறைவேற் பல்கலைக் கழகத்தை நடத்தலாம்.

அப்படிச் செய்யும் போது தீவகத்திற்கு மக்கள் செல்வதற்கான சந்தர்ப்பம் ஏற்படும்.

**விதானையார்:-** உண்மை தான். யுத்தத்திற்கு முன்பு என்ன மாதிரியாக இருந்த தீவகம் இப்ப ஆட்கள் இன்றி பனையும் பற்றையுமாகக் கிடக்குது.

அதோட எங்கட அறிவாளிகளும் தீவகத்திற்கு எதையும் குடுக்க மாட்டினம்.

**பண்டிதர்:-** என்ன விதானையார் சொல்லுறியள்.

**விதானையார்:-** எங்கட புத்திஜீவிகளும் அரச அதிகாரிகளும் நினைத்திருந்தால், தீவகத்தில தேசிய கல்வியியல் கல்லூரியைக் கொண்டு போயிருக்கலாம். இல்லையெண்டால், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின்ர ஒரு பீடத்தையாவது தீவகத்தில அமைத்திருக்கலாம். ஆனால் அது எதுவும் நடக்கல்ல.

இந்த நிலையில, போரால பாதிக்கப்பட்ட தீவக் மண் மேலும் பாதிப்பைச் சந்தித்துள்ளது.

இந்த நிலையில தீவகத்தில இருக்கிற மக்களின்ர இருப்பை உறுதி செய்வதற்கு ஏதாவது ஏற்பாடுகள் செய்ய வேணும். அதில ஒண்டுதான் தீவகத்தில ஒரு தர மான பிறைவேற் பல்கலைக்கழகத்தை அமைக்கிறது.

தீவகத்தில ஒரு தரமான பிறைவேற் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டு, போக்குவரத்து வசதிகளும் செய்யப்பட்டால் எங்கட மாணவர்கள் அங்கபோய் வருவினம். சிலவேளை அங்க தங்கியிருந்தும் படிக்கலாம்.

இந்த நிலைமை தீவகத்தின்ர கல்வியையும் மேம்படுத்தும்.

**பண்டிதர்:-** விதானையார் நீங்கள் இப்படிச் சொல்லுறியள், ஆனால் அல்லைப்பிட்டியில ஒரு இன்ரநஷனல் ஸ்கூல் அமையப்பெற்றதால, அல்லைப்பிட்டி மற்றும் மண்கும்பான் பகுதிகளில உள்ள அரச பாடசாலைகள் வெறிச்சோடிக் கிடக்குதாம்.

**கங்காணி:-** ஓ! இப்ப தமிழ் மாணவர்களுக்கு கல்வியைவிட, அவர்கள் பாடசாலைகளில சைவ சமயம் படிக்கிறதையும் காலைப் பிரார்த்தனையில தேவாரம் சொல்லுறதையும் தடுக்க வேணும் என்பது தானே மேலோங்கி இருக்குது.

இப்படியான காரியங்களைச் செய்யிறதுக்கு இன்ரநஷனல் ஸ்கூல் என்ற மெக்கானிசம் நல்லா உதவுது.

இருந்தாலும் தீவகத்தில இருக்கிற மக்களின்ர கல்வியில விளையாடுறது மிகப் பெரும் பாவம்.

தீவகத்தில இருக்கிற பிள்ளைகள் அரச பாடசாலையில ஏதோ படித்துக்கொண்டிருந்தவியள்.

ஆனால் என்னைப் பொறுத்த வரை, தீவகத்தில இருக்கிற இன்ரநஷனல் ஸ்கூலால மாணவர்கள் இடைவிலகல் அதிகரிக்கும். அதற்குப் பிறகுதான் தாங்கள் ஒரு பெரும் தவறைச் செய்து போட்டினம் எண்டு சம்பந்தப்பட்டவியள் வருந்துவினம்.

இவ்வாறு கங்காணி கார்த்திகேயன் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**ஜனாதிபதியின் கோரிக்கையை ஏற்று தமிழ் தலைவர்கள் ஒன்றுபடுவார்களா வியாசரே?**

**சி.சுரேசன் பத்தமேனி**

**இனப்பிரச்சினைக்கான தீர்வு நோக்கி நகர்ந்து செல்லும் அதே வேளை அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து பொருளாதார முன்னேற்றத்துக்காக செயற்பட முடியாதா?**

இனப்பிரச்சினைக்கான தீர்வுக்காக எவரும் நகர்ந்து செல்லவில்லை தம்பி. சும்மா பேச்சுக்கு மட்டும் இனப்பிரச்சினைக்கான தீர்வு என அடித்து விடுகிறார்கள்.

இதை நாம் உண்மை என நம்பிவிடக் கூடாது.

பொருளாதார முன்னேற்றத்துக்காக அனைவரும் ஒத்துழைப்பதா? அடப் போங்கையா! எம்மவர்களின் சுய நல அரசியலைப் புரியாமல் நாம் இவ்வாறு எல்லாம் சிந்தித்துவிடக் கூடாது.

ஏனென்றால் எம்மவர்க்கு தமக்குப் பின் தன் மகனை எவ்வாறு அரசியலுக்குள் புகுத்தலாம் என்ற சுயநல புத்தி வேலை செய்யுமே தவிர, எம் சமூக முன்னேற்றத்துக்காக ஒரு போதும் செயற்பட மாட்டார்கள்.

அவ்வாறு நாம் நினைப்போமாக இருந்தால் முட்டாள்கள் நாம்தான்.

**சுதன் குப்பிழான்**

**காணாமல் போனவர்கள் எல்லாம் புதைக்கப்பட்டவர்களாக இருக்குமா வியாசரே?**

காணாமல் போனவர்களின் உறவுகள் பல வருடங்கள் கடந்தும் இன்று வரை போராட்டம் நடத்திக்கொண்டே இருக்கிறார்கள்.

அரசாங்கமோ அதற்கு பதில் வழங்காமல் அவர்களுக்கு நட்டஈடு வழங்க முன்வந்துள்ளது.

ஆனால் எமது உறவுகளுக்கு நடந்தது என்ன என்பதையே நாம் கேட்கின்றோம் என உறவுகள் கோருகின்றார்கள்.

காணாமல் போனவர்கள் தொடர்பில் தீர்க்கமான முடிவைக் கூறாது நட்டஈடு தருகின்றோம் என்பதற்குள் இருக்கும் உண்மையை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

காணாமல் போனவர்களை மண்ணுக்குள் தேடுங்கள் என யாரோ ஒரு பெரும்பான்மை அரசியல் தலைவர் கூறியது நினைவில் வருகிறது

இதுதான் உண்மை போலும்.




**அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**

**076 097 3126**

**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**தீரா யாழ்ப்பாணம்**

**நாட்டில் நடப்பதைப் பார்த்தால் பயமாக இருக்கிறதே வியாசரே?**

உண்மைதான் அந்தளவிற்கு கொலை, கொள்ளை அதிகரித்து விட்டது.

யாரிடமும் பணம் இல்லை. இருப்பவர்களும் இல்லாதவர்களுக்கு வழங்கத் தயார் இல்லை.

நிலை இதுவாக இருக்கையில் இல்லாதவன் ஏதோ கஷ்டப்பட்டு தன் குடும்பத்தை கரை சேர்க்க பாடுபடுகிறான். ஆனால் போதைக்கு அடிமையான ஒருவர் அவ்வாறு இருந்துவிட முடியாது. அவன் போதைக்காக எந்த எல்லை வரை செல்வான்.

இப்போது நடக்கும் நிகழ்வுகளின் பின்னால் நிச்சயம் போதைக்கானதாய் தான் இருக்கும்.

எப்படி இருந்த மனித சமுதாயம் எப்படி மாறிவிட்டது என்பதைப் பார்க்கும் போது மனம் வேதனையடைகிறது.

**தமிழ் யாழ்ப்பாணம்**

**பொருட்களின் விலை குறைவடைந்தாலும் அது பழைய நிலைக்கு வருவதற்கான சாத்தியம் உண்டா?**

கடந்து போதல் என்ற கொடும் செயல் இருக்கும் வரை மனித குலத்திற்கு விமோசனம் இல்லை.

எது நடந்தாலும் நமக்கென்ன என எண்ணும் மனம் கொண்டதனால் தான் இந்நிலை.

அந்தளவிற்கு நாம் அனைத்துக்கும் பழக்கப்பட்டு விட்டோம். எது நடந்தாலும் அது எமக்கு சர்வ சாதாரணமாகவே இருக்கும்.

இப்போதைய பொருட்களின் விலையேற்றத்திற்கும் நாம் பழக்கப்பட்டு விட்டோம் என்பதுதான் உண்மையானது.

வரவு எட்டணா செலவு பத்தணா என்பது எவ்வாறான விளைவுகளைத் தரும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.



**காணாமல் போனவர்கள் எல்லாம் புதைக்கப்பட்டவர்களாக இருக்குமா வியாசரே?**

**கரிஷ் யாழ்ப்பாணம்**

**வாழ்வில் அதிக வெற்றியைப் பெற்ற முதல் மனிதன் யார் வியாசரே?**

ஒரு மனிதனின் வெற்றியை ஒருபோதும் அதிகம்-அதிகமின்மை என பிரித்துப் பார்த்துவிட முடியாது.

அந்த வெற்றியைப் பெறுவதற்கு அவன் பட்ட தோல்விகளின் எண்ணிக்கையையும் கணக்கில் எடுத்துப் பார்க்க வேண்டும்.

ஏனென்றால் ஒரு மனிதனின் வெற்றிக்கான இரகசியமாக அவன் பட்ட தோல்விகளும் அவமானங்களுமே பாடமாக அமையும். வெற்றிகள் கடலில் தெரியும் பனிப்பாறைகளைப் போன்றவை. பார்ப்பதற்கு அவ்வெற்றிகள் பிரம்மாண்டமாய் தெரிந்தாலும் எமக்குத் தெரியும் அளவைவிட பல மடங்கு பிரம்மாண்டமாய் கடலின் அடியில் இருக்கும். மேல் தெரியும் வெற்றியை விட அடியில் இருக்கும் தோல்விகளே அதிகமானதாக இருக்கும் என்பதே நிதர்சனம்.

**மதுவன் மீசாலை**

**தமிழ்த் தலைவர்களை ஒன்று சேருமாறு ஜனாதிபதி கேட்டிருக்கிறாரோ?**

இனப்பிரச்சினைக்கான தீர்வைப் பெறுவதற்காக அனைத்து தமிழ் கட்சிகளும் ஒன்றிணையுங்கள் என ஜனாதிபதி கோரிக்கை விட்டதற்குள் இருக்கும் ஜனாதிபதியின் நம்பிக்கையை பாராட்டியே ஆக வேணும்.

அதாவது ஒருபோதும் எமது தமிழ் அரசியல் தலைவர்கள் ஒன்றிணைய வாய்ப்பு இல்லை என்ற அதீத நம்பிக்கையின் வெளிப்பாடே ஜனாதிபதியின் கூற்றிற்கு காரணமாக அமைந்திருந்தது.

எமது அரசியல்வாதிகளுக்கு சுயநல அரசியல் மாத்திரமே தெரியும். அது ஜனாதிபதிக்கு நன்றாகத் தெரியும்.

இவர்கள் ஒருபோதும் ஒன்றிணையப் போவதில்லை என்ற மிகுந்த நம்பிக்கையுடன் அவ்வாறு கோரிக்கை விட்டிருக்கிறார்.

**சுந்தரம் பருத்தித்துறை**

**ஜனாதிபதியின் கோரிக்கையை ஏற்று தமிழ் தலைவர்கள் ஒன்றுபடுவார்களா வியாசரே?**

யார் தலையால் நடந்தாலும் அது நடக்கப்போவதில்லை என்பது மட்டும் உண்மை. ஏனென்றால் ஒருநாளும் எமது தலைவர்கள் ஒன்றிணையப் போவதில்லை.

அவர்களின் சிந்தனையோ தமிழினத்துக்கான தீர்வைப் பெற்றுத் தரும் சிந்தனையல்ல. மாறாக தமது வங்கிக் கணக்கை எவ்வாறு ஏற்றுவது, மாடமாளிகை கட்டி அதில் குடி புகுவது, விதவிமான வாகனம் வாங்கி கொழும்பு-யாழ் விசிற் அடிப்பது என்பதே.

அதற்கு தமிழினத்தை ஒரு கருவியாக பயன்படுத்துகிறார்கள். தேர்தல் வந்தவுடன் தமிழ் தேசியம், போராட்டம், வீரம், வஞ்சகம் என்று அடித்துவிடும் இவர்களிடம் ஏமாறும் தமிழினத்தை என்னவென்று கூறிவிட முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

**திரைப்படம்: குலமகள் ராதை**
**பாடியவர்: P. சுசீலா**
**இயற்றியவர்: கவிஞர் கண்ணதாசன்**
**இசை: K.V. மஹாதேவன்**



பகலிலே சந்திரனைப் பார்க்கப் போனேன் – அவன்
இரவிலே வருவதாக ஒருத்தி சொன்னாள்
பகலிலே சந்திரனைப் பார்க்கப் போனேன் – அவன்
இரவிலே வருவதாக ஒருத்தி சொன்னாள்

இரவிலே அவனைக் காண நானும் நடப்பேன்
இரவிலே அவனைக் காண நானும் நடப்பேன்
– அவன்
எல்லோரும் பார்க்கும்படி உயரத்தில் இருப்பான்

பகலிலே சந்திரனைப் பார்க்கப் போனேன் – அவன்
இரவிலே வருவதாக ஒருத்தி சொன்னாள்

கடலிலே மீன் பிடிக்க நானும் போன் – மீன்
கரையேறிப் போனதாக ஒருதத் சொன்னாள்
கடலிலே மீன் பிடிக்க நானும் போன் – மீன்
கரையேறிப் போன்தாக ஒருதத் சொன்னாள்

படகிலே மனதை ஏற்றிப் பார்க்கப் போனேன்
படகிலே மனதை ஏற்றிப் பார்க்கப் போனேன்
– அதைப்
பாறையிலே மோதும்படி ஒருத்தி சொன்னாள்

பகலிலே சந்திரனைப் பார்க்கப் போனேன் – அவன்
இரவிலே வருவதாக ஒருத்தி சொன்னாள்

ஆலயத்தில் ஆண்டவனைப் பார்க்கப் போனேன்
– அவள்
அர்த்த ஜாமப் பூஜையிலே பார்க்கச் சொன்னாள்
ஆலயத்தில் ஆண்டவனைப் பார்க்கப் போனேன்
– அவள்
அர்த்த ஜாமப் பூஜையிலே பார்க்கச் சொன்னாள்

மாலை ஒன்று கையில் கொண்டு நானும்
போனேன்
மாலை ஒன்று கையில் கொண்டு நானும்
போனேன் – அவள்
மலரை மட்டும் உதிர்த்து விட்டுப் போகச் சொன்னாள்

பகலிலே சந்திரனைப் பார்க்கப் போனேன் – அவன்
இரவிலே வருவதாக ஒருத்தி சொன்னாள்

# வெடித்துச் சிதறிய டைட்டன்!

டைட்டானிக் கப்பலை தேடிச் சென்ற 'டைட்டன் நீர்மூழ்கியின்' உள்ளிருந்தே வெடிப்பு நிகழ்ந்து விபத்திற்கு உள்ளாகியிருப்பது தெரிய வந்துள்ளது. அதில் பயண்ித்த 5 பேரும் உயிரிழந்துள்ளனர்.

கடலின் மேற்பரப்பிலிருந்து 4000 மீற்றர் ஆழத்திற்குச் செல்வது என்பது அவ்வளவு எளிதான காரியமல்ல. அங்கே பல அசம்பா விதங்கள் நடக்கலாம்.

மிகக் குறிப்பாக டைட்டானிக் கப்பலின் சிதைவுகள், அட்லாண்டிக் பெருங்கடலில் 3800 மீற்றர் ஆழத்தில் பொதிந்து கிடக்கின்றன. அத்தனை பெரிய ஆழத்திற்குள் சூரிய ஒளிகளால் ஊடுருவ முடியாது. இதனால் இப்பகுதியை 'midnight zone' என்று அழைக்கின்றனர்.

ஆனால் டைட்டானிக் சிதைவுகள் இருக்கும் பகுதிக்குச் செல்வதில் இருள் மட்டுமே சவாலாக இருக்கிறது என்று கூற முடியாது. காரிருளையும் விட பயங்கரமான ஆபத்துகள் அங்கு இன்னும் என் னென்ன இருக்கிறது என்று உங்களுக்குத் தெரியுமா? கடந்த 1911 ஆம் ஆண்டு, கிரீன்லாந்தின் தென்மேற்குப் பகுதியில் இருந்த பெரிய பனிப்பாறையிலிருந்து, ஒரு பெரிய பனிக்கட்டி உடைந்து மிதக்கத் துவங்கியது. அது மெதுவாக தெற்கே நகர்ந்து படிப்படியாகக் கரைந்தது.

ஓராண்டிற்குப் பிறகு, சௌதாம்ப்டன் நகரிலிருந்து, நியூயோர்க் நோக்கி தனது பயணத்தைத் துவங்கியிருந்த டைட்டானிக் கப்பல் அவ்வழியாக வந்து கொண்டிருந்தது. அப்போது கிரீன்லாந்திலிருந்து உடைந்த பனிப்பாறையில் எஞ்சியிருந்த பகுதிகள் அனைத்தும் இந்த டைட்டானிக் கப்பல் மீது மோதின.

ஓஷன்கேட் நிறுவனத்திற்குச் சொந்த மான 'டைட்டன் நீர்மூழ்கி', அதில் பயணித்த 5 பேருடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை காணாமல் போனது. இதற்கான தேடுதல் பணிகள் நடந்து வந்த நிலையில், வியாழனன்று அமெரிக்காவின் கடலோர காவல்படை, டைட்டன் நீர்மூழ்கி விபத்திற்குள்ளானதாக அறிவித்துள்ளது.

'ஆளில்லாத ரோபோடிக் நீர்மூழ்கி, டைட்டனின் சிதறிய பாகங்களை நீருக்கடியில் கண்டுபிடித்திருப்பதாக அமெரிக்க கடலோர காவல் படையினர் கூறினர்.

'டைட்டன் நீர்மூழ்கி வெடித்துச் சிதறியுள்ளது என்றும் டைட்டானிக் தளத்தைச் சுற்றியுள்ள குப்பைகளுக்கு மத்தியில் டைட்டன் நீர்மூழ்கியின் ஐந்து பெரிய துண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் இது நீர்மூழ்கியின் அழுத்த அறை வெடித்திருப்பதைக் காட்டுவதாகவும்' அமெரிக்க கடலோர காவல் படை கூறியுள்ளது.

இதற்கு முன் னால் டைட்டானிக் மூழ்கியுள்ள பகுதிக் குப் பயணம் மேற் கொண்டவர்கள், கட லின் ஆழத்தில் இறங் கிய பிறகு அங்கே எப்படியான சூழல் நிலவும் என்பது குறித்து விபரித்துள்ளனர்.

'இருள் நிறைந்த பகுதிக்குள் நீர்மூழ்கி இறங்கியதும் அதன் விளக்குகள் ஒளிரச் செய்யப்படும். ஆனால் அதன்மூலம் குறிப்பிட்ட தூரம் வரையிலும் தான் நம்மால் பார்க்க முடியும். மேலும் அத்தனை பெரிய ஆழத்தில் எளிதாக வழி மாறவிடவும் அதிகமான வாய்ப்புகள் உள்ளன'

ஆனால் அதேநேரம், பல ஆண்டுகளாக ஆய்வு செய்யப்பட்டு வரும் டைட்டன் கப்பலின் சிதலமடைந்த கப்பல் குறித்து வழங்கப்பட்டிருக்கும் தெளிவான வரைபடம், அங்கே செல்பவர்களுக்கு ஓரளவு பயனுள்ளதாக இருக்கும். அதே போல் நீர்மூழ்கியைச் சுற்றியுள்ள அம்சங்களையும் பொருட்களையும் கண்டறிய சோனார் கருவி உதவி புரியும்.

ஆழ்கடலுக்குள் பயணிக்கும் கப்பல் பைலட்கள், இயக்க ஊடுருவல் வழி செலுத்தும் முறை (inertial navigation) என்ற தொழில்நுட்பத்தை நம்பி இருக்கின்றனர். அவர்கள் பயணிக்கும் திசை குறித்து அறியவும் தொடக்க நிலையிலிருந்து அவர்களின் வேகத்தைக் கணித்துக் கொள்ளவும் இது உதவுகிறது. தற்போது விபத்துக்குள்ளாகியிருக்கும் டைட்டன் நீர்மூழ்கியும் இதே தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தியதாக ஓஷன்கேட் நிறுவனம் கூறியுள்ளது. மேலும் அதில் ஒலியியல் சென்சார்கள் (Acoustic sensor) பொருத்தப்பட்டிருந்ததாகவும் அந்நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

ஆனால் எத்தனை வசதிகள் இருந்தாலும் கடலின் ஆழத்திற்குள் சென்றுவிட்ட பிறகு, அங்கே சரியான வழிதடங்களைக் கண்டறிவது கடினமாகத்தான் இருந்தது என 'டைட்டன் நீர்மூழ்கியில்' பயணம் செய்த முந்தைய பயணிகள் தெரிவித்துள்ளனர்.

கடலின் ஆழத்திற்கு நாம் செல்லச் செல்ல, அங்கே அழுத்தங்கள் அதிகரித்துக் கொண்டே இருக்கும். எளிமையாகச் சொல்ல வேண்டுமென்றால், கடலுக்கு அடியில் 3800மீற்றர் ஆழத்தில் கிடக்கும் டைட்டானிக் சிதலங்கள் இருக்கும் பகுதியில், கடலின் மேற்பரப்பில் இருப்பதை விட 390 மடங்கு அதிகளவு அழுத்தங்கள் இருக்கும்.

'இது ஒரு கார் ரயரில் இருப்பதைவிட 200 மடங்கு அதிகளவு அழுத்தத்தைக் கொண்டது' கார்பன் மற்றும் டைட்டானியத்தால் உருவாக்கப்பட்ட டைட்டன் நீர்மூழ்கியின் சுவர்கள், 4000 அடி ஆழத்திலும் உள்ள அழுத்தங்களை சமாளிக்கக் கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டது என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

கடந்த 100 ஆண்டுகளுக்கும் மேலாக கடலின் தரைப்பகுதியில் கிடந்ததால், டைட்டானிக் கப்பல் துருப்பிடித்துச் சிதற ஆரம் பித்து விட்டது. இதன் காரணமாக ஒரு நீர்மூழ்கிக் கப்பல் அதற்கு அருகில் போனால், அது சிதிலங்களின் மீது மோதக்கூடும் அல்லது அவற்றில் சிக்கிக் கொள்ளக்கூடும்.

அதேபோல கடந்த 40 ஆண்டுகளில், டைட்டானிக் சிதைவுகளின் மீதுள்ள பக்டீரியாக்கள் அதிகரித்திருப்பதாகவும் சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இதனால் ஏற்படும் அரிப்புகள் காரணமாக, டைட்டானிக் சிதைவுகள் மேலும் மோசமடைந்து வருவதாக அவர்கள் குறிப்பிடுகின்றனர். டைட்டானிக் சிதைவுகள் இருக்கும் இடத்தைச் சுற்றியுள்ள புவியியல் அம்சங்கள் குறித்து இன்னும் முழுமையாக ஆராய்ச்சிகள் செய்யப்படவில்லை. அதனால் தற்போது ஏற்பட்டிருக்கும் டைட்டன் நீர்மூழ்கியின் விபத்திற்கான காரணம் குறித்து உறுதியாக எதுவும் சொல்ல முடியாது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நம்மில் பலர் செல்வம் சேர்க்க நினைக்கிறார்கள். ஆனால், அவர்கள் செய்யும் பல பணத் தவறுகளால் அது கைகூடாமல் போய் விடுகிறது. எது போன்ற பணத் தவறுகள் நாம் செல்வம் சேர்ப்பதைத் தடுக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டால், இனிவரும் காலத்தில் அந்தத் தவறுகளை நம்மால் செய்யாமல் இருக்க முடியும். எனவே, அந்தப் பணத் தவறுகள் என்னென்ன என்பதைப் பார்ப்போம்.

### ஆடம்பரமான வீடு வாங்குதல்...

இது பெரும்பாலானவர்கள் செய்யும் மிகப் பெரிய நிதித் தவறாகும். அதுவும் பிறர் நம்மைப் பற்றி பெருமையாகப் பேச வேண்டும் என்பதற்காகவே ஆடம்பரமான வீட்டை வாங்க வேண்டும் என்று சிலர் நினைக்கிறார்கள். சிலர், அதிகம் கடன் வாங்கியாவது வாங்கி விடுகிறார்கள்.

வீடு என்பது நாம் நிம்மதியாக வாழ்வதற்காகத்தான். நம் தேவைக்கேற்ப அந்த வீட்டை வாங்குவது அல்லது கட்டுவதுதான் சரியான முடிவே தவிர, மற்றவர்கள் மெச்ச வேண்டும் என்பதற்காக நம் தகுதிக்கு அப்பாற்பட்டு, சொகுசு வீட்டை வாங்குவது சரியல்ல.

### கைமீறிப் போகும் சிறிய செலவுகள்...

'சிறு துளி பெரு வெள்ளம்', 'சிறிய துளையானது கப்பலையே கவிழ்த்துவிடும்' என்பது போல் சிறிய செலவுகள் ஒருவரை செல்வந்தர் ஆகவிடாமல் தடுக்கும். பல நேரங்களில் சிறிய தொகைதானே என்று நமக்குத் தேவை இல்லாத பல பொருட்களை வாங்குகிறோம். அவற்றை நாம் ஒருபோதும் பயன்படுத்துவதில்லை என்பதால், வீட்டின் ஏதோ மூலையில் கிடக்கும்.

இப்படிச் செய்யாமல் எது தேவை, எது தேவையில்லை என்பதை யோசித்து பட்ஜெட் போட்டு செலவு செய்யுங்கள். அப்படிச் செய்யும் பட்சத்தில் இப்படி தேவை இல்லாத சிறிய செலவுகளை நிச்சயம் தவிர்க்க முடியும் என்பதுடன் ஒவ்வொரு மாதமும் கொஞ்சம் கூடுதலாகச் சேமிக்க முடியும்.

### அடிக்கடி கார்களை மாற்றுவது...

இன்றைக்குப் பலரும் அடிக்கடி ஸ்மார்ட் போன், கார் போன்றவற்றை மாற்றி வருகிறார்கள். அதுவும் சிலர் சொகுசு காரை வாங்கி சில ஆண்டுகள் பயன்படுத்திவிட்டு, விற்கிறார்கள். இவர்கள், வாழ்நாள் முழுக்க கார் கடனுக்கு இ.எம்.ஐ கட்டுபவர்களாகவே இருக்கிறார்கள். இதிலேயே அவர்களின் சம்பளம் கரைந்து விடுகிறது.

# செல்வம் சேர்ப்பதைத் தடுக்கும் தவறுகள்..!



### முதலீட்டை மிகவும் தாமதமாக ஆரம்பிப்பது...

நம்மில் பலரும் செய்யும் மிகப் பெரிய தவறு இதுதான். பிற்காலத்தில் நம் தேவைகள் என்ன, அதற்கு எவ்வளவு பணம் தேவைப்படும், அந்தப் பணத்தை எப்படி சேர்ப்பது என்கிற சிந்தனை நம்மில் பலருக்கும் இருப்பதில்லை. என்றைக்கோ வரப்போகிற ஓய்வுக்காலத்துக்கு நாம் இன்றிலிருந்து பணம் சேர்க்க வேண்டுமா என்கிற அஜாக்கிரதையான எண்ணமே இதற்குக் காரணம்.

### ஆடம்பர ஆடைகள் அவசியமா..?

மற்றவர்கள் தங்களைப் பெருமையாக நினைக்க வேண்டும் என்பதற்காக சிலர், அதிக விலை கொண்ட பிராண்டட் ஆடைகளை அணிகிறார்கள். ஆடைகள் என்பது ரூ.300 இற்கும் இருக்கிறது. ரூ.3,000 இற்கும் இருக்கிறது. ஏன், ரூ.30,000 இற்கும் இருக்கிறது. இவை அனைத்தும் ஒரே தேவையைத்தான் நிறைவேற்றுகின்றன. முதலீடு, காப்பீடு உள்ளிட்ட மிக முக்கியமான அத்தியாவசியங்களைக் கூட தவிர்த்துவிட்டு, சிலர் ஆடைக்காக அதிகம் செலவு செய்கிறார்கள். இப்படிச் செய்தால் செல்வம் சேர்க்க முடியாமல் போகும். ஆடைக்கான செலவுகளை நம் வருமானத்தில் எத்தனை சதவிகிதம் ஒதுக்க வேண்டும் என நாம் தீர்மானித்துக் கொள்வது அவசியம்!

# கூலிப்படை போல கூலி இராணுவம்!

கூலிப்படையை அமர்த்திக் கொலை செய்வதைக் கேள்விப்பட்டிருக்கிறோம். கூலிப்படையை வைத்துப் போர் செய்வதைப் பற்றி முதல்முறையாகக் கேள்விப்பட்டு பலர் அதிர்ந்திருப்பார்கள். ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கு எதிராக, அந்த நாட்டின் தனியார் இராணுவமான வாக்னர் குரூப்பின் தலைவர் யெவ்கெனி பிரிகோசின் நிகழ்த்திய கிளர்ச்சி, உலகம் முழுக்கத் தலைப்புச் செய்தியானது.

உக்ரைன் மீது ரஷ்யா நடத்திவரும் போரில் பிரிகோசின் வைத்திருக்கும் தனியார் இராணுவத்தைச் சேர்ந்த 25,000 வீரர்கள் போர் செய்து வருகிறார்கள். பெரும்பாலும் முன்னாள் சிறைக்கைதிகள், புடினுக்கு நெருக்கமானவரான பிரிகோசின் இவர்களை சட்டவிரோதமாக விடுதலை செய்து தன் படையில் சேர்த்திருக்கிறார். ரஷ்யாவில் தனியார் இராணுவத்துக்கு அனுமதி இல்லை என்றாலும் சட்டத்தை மீறி இப்படி ஐந்து அமைப்புகள் புடின் ஆசியுடன் செயற்படுகின்றன. தனக்கு எதிராகக் கலகம் செய்பவர்களை இரகசியமாகத் தீர்த்துக் கட்டுவது, வெளிநாடுகளில் சென்று தனக்காக உள்வு வேலை பார்ப்பது ஆகியவற்றுக்கு இவர்களைப் பயன்படுத்துகிறார் புடின். சிரியா, மத்திய ஆபிரிக்கக் குடியரசு, செசன்யா என ரஷ்ய இராணுவத்துடன் இவர்கள் பல நாடுகளுக்குச் சென்று போரிட்டு வருகிறார்கள்.

உக்ரைன் போரில் ரஷ்ய இராணுவம் போதுமான வேகம் காட்டவில்லை என்று பிரிகோசின் குற்றம் சாட்டினார். சில தளபதிகளையும் இராணுவ அமைச்சரையும் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று அவர் கிளர்ச்சியில் இறங்கினார். உக்ரைனிலிருந்து ரஷ்யாவுக்குள் வந்து ரஸ்தோவ் என்ற நகரைக் கைப்பற்றி, தலைநகர் மொஸ்கோவை முற்றுகையிடப் போவதாக அறிவித்தார். ஒரு நாட்டின் சட்டவிரோதக் கூலிப்படை அந்த நாட்டின் ஒரு பெருநகரத்தைக் கைப்பற்றியதும் அந்தப் படைக்கு மக்கள் அளித்த வரவேற்பும் வரலாற்றில் நடக்காத விநோதம். வல்லரசு ரஷ்யாவுக்கு அது நடந்தது.

புடினுக்கு நெருக்கமான நண்பரான பெலாரஸ் நாட்டு ஜனாதிபதி அலெக்சாண்டர் லுகாஷென்கோ சமாதானம் பேசி, வாக்னர் படையை மீண்டும் உக்ரைன் போர்முனைக்கு அனுப்பி வைத்திருக்கிறார். 'எதை வேண்டுமானாலும் மன்னிப்பேன். ஆனால், துரோகத்துக்கு என் அகராதியில் மன்னிப்பே கிடையாது' என்பது புடின் ஒருமுறை பேட்டியில் சொன்ன புகழ்மிக்க வாசகம். இப்போது பெலாரஸில் பாதுகாப்பாக இருக்கும் யெவ்கெனி பிரிகோசின் எந்த நிமிடமும் புடின் ஏவும் ரகசியக் கொலையாளிகளால் வீழ்த்தப்படலாம். (பெலாரஸ் நாட்டிலும் ஒரு கூலி இராணுவம் இருக்கிறது. அதுவும் ரஷ்யாவுக்காக உக்ரைனில் சண்டை செய்கிறது என்பது ஒரு உபரித் தகவல்)

நாகரிக சமூகத்தில் கூலி இராணுவத்துக்கு இடமில்லை. இராணுவ ஒழுங்குக்குள் அடங்காத, எந்த ஒரு சர்வதேச போர் சட்ட வரையறையிலும் வராத இவர்களை போரில் ஈடுபடுத்தக்கூடாது என்று ஐ.நா கூறுகிறது. ஆனால், அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகளே இதுபோன்ற தனியார் கூலி இராணுவங்களைப் பயன்படுத்துகின்றன.

தீவிரவாதத்துக்கு எதிரான யுத்தம் என்று ஈராக் தொடங்கி ஆப்கானிஸ்தான் வரை அமெரிக்க இராணுவம் நிகழ்த்திய போர்களில் பெருமளவில் கூலி இராணுவத்தினர் பயன்படுத்தப்பட்டனர். ஆப்கானிஸ்தான் ஜனாதிபதியாக இருந்தபோது ஹமீத் கர்சாய்க்கு பாதுகாப்பு அளித்ததே இப்படிப்பட்ட ஒரு தனியார் இராணுவம்தான். 'இராணுவ முகாம்களைக் காவல் புரிவது, சாலை போடுவது போன்ற பணிகளில் பாதுகாப்பு அளிப்பது ஆகியவற்றை மட்டுமே இவர்கள் செய்தார்கள்' என்று அமெரிக்க அரசு சொன்னாலும் உண்மை அது இல்லை. "இவர்கள் எந்த ஒழுங்குக்கும் கட்டுப்படுவதில்லை. முட்டாள்த்தனமாகச் செயற்படுகிறார்கள். துப்பாக்கியை எடுத்து யாரையாவது கொன்றுவிடுகிறார்கள். அதற்கு நாங்கள் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது" என்று ஈராக் தலைநகர் பாக்தாத்தில் அமெரிக்கப் படைகளுக்குத் தளபதியாக இருந்த கார்ல் ஹோர்ஸ்ட் 2005 ஆம் ஆண்டு சொன்னார். எங்கெல்லாம் எத்தனை அப்பாவிகளை இப்படிக் கூலி இராணுவம் கொன்றிருக்கும், அதில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைத்ததா, தவறு செய்தவர்களுக்கு தண்டனை வழங்கப்பட்டதா என்றெல்லாம் யாருக்கும் தெரியாது. ஏழை நாடுகளில் சாகும் மனிதர்களுக்கு ஏது நீதி?

ஏமன் நாட்டிலிருந்தபடி தங்களுக்கு எதிராகக் கலகம் செய்பவர்களை ஒடுக்க, அங்கே கூலி இராணுவத்தை அனுப்பியிருக்கிறது சவுதி அரேபியா. லிபியா, சிரியா என்று உலகெங்கும் கூலி இராணுவத்தினர் போர் புரிகிறார்கள்.

பெரும்பாலான நாடுகளின் கூலி இராணுவத்துக்கு ஆள் எடுப்பது தென்அமெரிக்க நாடான கொலம்பியாவில் இருந்துதான். 30 ஆண்டுகளுக்கு முன்பு கொலம்பியாவில் மோசமான உள்நாட்டுப் போர் நடந்தது. அப்போது, 'யார் வேண்டுமானாலும் பாதுகாப்புக்குத் தனியார் இராணுவம் ஒன்றை வைத்துக் கொள்ளலாம்' என்று அரசு சட்டம் போட்டது. ஒரு கட்டத்தில் அந்த நாட்டில் 740 தனியார் இராணுவங்கள் இருந்தன. அவற்றில் பயிற்சி எடுத்த வீரர்கள் இப்போது மலிவான கட்டணத்துக்குக் கிடைக்கிறார்கள். "அமெரிக்க மக்கள் தங்கள் பிள்ளைகள் அந்நிய மண்ணில் போரிட்டுச் சாவதை விரும்பவில்லை. அவர்களுக்கு இழப்பீடும் அதிகம் தர வேண்டியுள்ளது. அதற்குப் பதிலாக கொலம்பியாவிலிருந்து குறைந்த கூலிக்குக் கிடைப்பவர்களை அனுப்புகிறோம்" என்று கொலம்பியாவுக்கான அமெரிக்கத் தூதர் மைல்ஸ் ஃபிரசெட் ஒருமுறை சொன்னார். கூலிப்படையினர் போலவே, கூலி இராணுவத்தினர் உயிருக்கும் மதிப்பில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோல்வியா? வேள்வியா?

இனத்தீர்வு வேள்வியில்
வெந்து தணிந்த உள்ளம்
தோல்வியை வேள்வியாக்க
தமிழின ஒற்றுமை
வேள்வியாக்குவோம்
தொற்றுக்கள் தோன்றியது
பல்தேசிய விருந்தாய்
வெற்றி கொண்டோம்...!
முற்றுப்புள்ளி அல்ல
தொடரும் எனத் தகவல்
அறவழியில்
அணி திரள்வோம்...!
தோல்வியை வெற்றியாக்க.

தமிழினியன்.



# அசைந்து வருகிறாள் ரதமதில் நயினை நாகேஸ்வரி

அலைமோதும் கடல் மீது அமர்ந்த
-அம்மை!
அருளுக்கு குறையற்ற தெய்வத்
-தாயுமையே!
அழகொளிர புன்னகையாள்
-நயினைகியே!
அம்பிகை அடியவர் குறை தீர்க்க
- வருகின்றாள்!
ஆசையுடன் கண்கொள்ளக் காட்சி காண
-அடியார் கூட்டம்!
அசைந்து வருகின்றாள் ரதமேறி
-நயினை நாகேஸ்வரி

நயினைக் கதிர் மகிந்தன,
நயினை.



# அடியார்களுக்கு நலமான வாழ்வு தரும் நாகபூஷணி தேரேறி வருகின்றாள்

பெற்றதாலன்னை பெறுமுயிரனைத்தும்
பேணலாம் அன்னை பெற்றிடுவோர்
உற்றதாலன்ன விரும்பிய அனைத்தும்
உதவலால் அன்னை எக்கலையும்
சொற்றதாலன்னை உலகொருவானும்
தொழுதலால் அன்னை என்றென்றும்
பற்றதாங் கருணை பொழிதலாலன்னை
பராபரை நாகபூஷணியாள்.

அன்புள நீர் அகமெல்லாம் பொங்கப் பொங்க
அறமெழுந்து பெருஞ்சேவை ஆற்ற ஆற்றத்
தொண்டு செயப் பல அன்பர் தோன்றத் தோன்ற
தோற்று சுவைச் சோறாக உண்ண உண்ணக்
கண்டு வரும் அடியார்கள் ஆர்ப்ப ஆர்ப்ப
கடியமுத சுரபியினாள் ஊட்ட ஊட்டக்
கொண்டு பசி தீர்த்தவர்கள் கோடி கோடி
கோடானு காலமெலாம் வாழி வாழி

நயினை.நா.க.குமாரசூரியர், JP.



## மௌனத்தின் தேடல்- 675



# துயில் கொள் செல்வமே!

அன்னை அவள் சிந்தனையில்
அண்ணன் அவன் மடிதனிலே
துயில் கொள்ளும் மழலையே!
கொடும் போர் உன் அன்னையைக் காவு கொண்டதா?
கண்ணை இறுக மூடி
துயில் கொள் செல்வமே!
நீ துயில் கொள்வது - உன்
அண்ணன் மடியில் -அவன்
உன்னை இமை போல் காப்பான்!

இ. உதிஸ்ரன்.
யா/ தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி.

# தாலாட்டு

மல்கோவா மாம்பழமே கண் உறங்கு
மரிக்கொழுந்தே நீ கண்ணுறங்கு
அன்னை மடி உனக்குத் தேவையில்லை
அண்ணன் மடி ஒன்றே போதுமடி
பிட்டிப்பால் உனக்குத் தந்திடுவேன்
விளையாட பொம்மைகள் தந்திடுவேன்
புத்தாடை உடுத்தி மகிழ்ந்திடுவேன்
உன் புன்னகை ஒன்றே போதுமடி
அண்ணனின் உள்ளத்தில் பேரின்பம்
கண்மணியே நீ கண் உறங்கு

கும்பவாழியான், உடுப்பிட்டி.

## மௌனத்தின் தேடல்- 676



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

# கோடும் கோலமும்

பொறுமையை மிகச் சோதிக்கும்
வறுமையின் கோரப்பிடியிது
வறுமைக்கோட்டை வரைபடத்தில்
வரைவதில் பல சிக்கல்கள்
இதனால் குறை போக்கும் கொடுப்பனவு
இடம் மாறிடும் கொடுமைகள்
சிறைப் பறவைகள் போன்று
இறைவன் விட்ட வழி என்று
இடர்படும் பரிதாப நிலையினை
இத்துயரம் வந்து. எதிரொலிக்கிறது

க.நாகராசா, நுணாவில்.

# காலத்தின் கொடுமை

பச்சிளங் குழந்தையை கையிலேந்தி
பள்ளி செல்லும் பாலகனே தூங்குவதன் மாயமென்ன?
பெற்றவர் உம்மை பாதி வழியில் விட்டுச் செல்ல
பேதை உள்ளங்கள் பேதலித்து நிற்க
பாசம் தந்திட யாரும் இல்லா அநாதையாக
அன்பு என்னும் அரவணைப்பிற்காய்
அவனியில் நீயும் ஏங்கி நிற்கின்றீரோ?
பசியும் தாகமும் உம்மை வாட்டி வதைக்க
துவண்டு தூங்கிக் கொண்டீரோ?
உங்களின் நிலை கண்டு நாமும்
விழிநீர் சொரிந்து நிற்கின்றோம்.

ஆ.செல்வி. திருநாவலூர்.

# காத்திருப்பு

அப்பனோ குடி போதையில் -
குடிசை மூலையில்
அம்மாவோ அரிசி வாங்க - அருவி
வெட்டலில் வயலில்
பாலகனோ பசி மயக்கத்தில்
சகோதரி மடியில்
பாவையோ அன்னையை எதிர்பார்த்து
குடிசை வாசலில் காத்திருப்பு.

சி.மகாலட்சுமி. கொக்குவில்.

# விடியலைத் தேடி

பட்டினியை துணைக்கு விட்டு
பெற்றவரும் சென்று விட்டார்
என்னை நம்பி ஒட்டிக் கொண்ட
பச்சை மண்ணை அரவணைத்து
விழிமூடி உறங்குகிறேன்
விடியலுக்காய் விழிப்பேன் என்ற நம்பிக்கையில்

இ.இளமதி.
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காலத்தின் பதிவு 68

# கடல்புறா

## அவள் அறிந்த இரகசியம்

உணர்ச்சிகளைச் சிறிதும் வெளிக்குக் காட்டாதவரும் திடமாகப் பேச வல்லவருமான தன் தந்தையின் பேச்சும் இதயமும் இத்தனை தூரம் குழையும் என்பதை அவள் சொப்பனத்திலும் நினைக்காததால் வியப்பு விகசித்த முகத்துடன் பலவர்மனை நோக்கி, "எதற்குக் கடமைப்பட்டிருக்கிறீர்கள்?" என்று வினவினாள்.

நான் உன் தந்தையல்ல என்பதைத் தெளிவுபடுத்தினேன்... என்றான் பலவர்மன் சற்றுத் தயக்கத்துடன்.

"ஆம் தெளிவுபடுத்தினீர்கள்?" என்றாள் மஞ்சளழகி அவன் என்ன சொல்லப் போகிறான் என்பதை அறியாமல்.

"தந்தையல்ல என்று தெரிந்த பின்பும் தந்தையே என்று அழைக்கிறாய்?" இதைச் சொன்ன பலவர்மனின் குரல் பெரிதும் தழுதழுத்தது. அவள் குழலைக் கோதிய கையும் லேசாக நடுங்கியது.

அவன் இதய தாபத்தை மஞ்சளழகி நன்றாகப் புரிந்து கொண்டாள். தந்தை மற்றவருக்கு ஆயிரம் துஷ்டரானாலும் தான் சம்பந்தப்பட்டவரை அவர் அன்பின் சொரூபம் என்பதையும் தானில்லாவிட்டால் அவர் வாழ்வே அவருக்கு அர்த்தமற்றதாகி விடும் என்பதையும் அறிந்து கொண்ட மஞ்சளழகி, தந்தையின் தாபம் மிகுந்த இதயத்தின் வறட்சிக்கு அன்பு நீரை ஊற்ற, "எனக்குத் தெரிந்த தந்தை நீங்கள்தானே?" என்று கூறினாள்.

"ஆம் இப்பினும் மாற்றம் தெரிந்த பின் மனம் மாறுவது இயற்கை" என்றான் பலவர்மன்.

"இயற்கை அப்படியும் இருக்கலாம்." என்றாள் அவள்.

"வேறெப்படி இருக்கும்?"

"தெரிந்து பழகிய இடத்தில் ஊறிவிட்ட அன்பும் உறவும் தெரியாத இடத்துக்குத் திடீரென மாறாதிருப்பதும் இயற்கைதான்."

"அப்படியானால் உன் அன்பு...?"

"உங்களிடமிருந்து எப்படி மாறும்?"

"ஏன் மாறக்கூடாது? நீ யாரென்பதையே நான் மறைத்து வைக்கவில்லையா?"

"மறைத்தாலென்ன? மகளைப் போல் வளர்த்தீர்கள்."

"வளர்க்க வேண்டிய கடமையிருந்தது. வளர்த்தேன்."

"எல்லோரும் கடடையை நிறைவேற்றுகிறார்களா?"

"இல்லை ஆனால் நிறைவேற்ற எனக்கு அவசியமிருந்தது."

"என்ன அவசியம்?"

"உன்னைப்பெற்றவரின்ஆணை."

"யார் அவர்?"

இதைக் கேட்டதும் பலவர்மனின் இதழ்களில் வருத்தம் தோய்ந்த புன்முறுவலொன்று படர்ந்து "சொல்ல எனக்கு உரிமையுமில்லை, துணிவுமில்லை." என்று அந்த பழைய பல்லவியையே அவன் பாடினான்.

அந்தப் பதிலைத் தொடர்ந்து மஞ்சளழகி ஏதேதோ கேள்விகளைக் கேட்டும் பலவர்மனிடமிருந்து மர்மத்தை விளக்கக் கூடிய சொல் எதுவுமே வரவில்லை. அவளது பிறவி மர்மத்தை உடைக்கத் திட்டமாக மறுத்து விட்ட அக்ஷயமுனைக் கோட்டைத்தலைவன் ஒன்று மட்டும்சொன்னான். "மகளே! உன் பிறவியின் மர்மம் ஒருநாள் வெளிப்பட்டாலும் வெளிப்படலாம். மறைத்தே இருந்தாலும் இருக்கலாம். ஆனால் ஒரு விஷயம் நான் நிச்சயமாகச் சொல்ல முடியும். இளையபல்லவனுக்கு நீ எந்த விதத்திலும் தாழ்ந்தவள் அல்ல. அவன் எத்தனை பெருங்குடி மகனோ அத்தனை பெருங்குடியில் நீயும் பிறந்தவள்.

(தொடரும்...)

---

# நான் வைரமுத்து பேசுகிறேன்... 14


## எனது பார்வையில் கண்ணதாசன்

அவரது கவிதா ஜோதிக்கு நெய்வார்த்தனவே தவிர, நீர் வார்க்கவில்லை.

பலவீனங்கள் அவரது ஊனினை உருக்கின. ஆனால் உள்ளொளி பெருக்கின.

அவரது கருத்து மாற்றங்களில் பல எனக்கும் விமர்சகர்களுக்கும் எப்போதும் உடன்பாடு இல்லை!

ஆனால் கடைசி வரைக்கும் அவரது கவித்துவத்தை



சந்தேகிப்பதற்கு எவருக்கும் தகுதி இல்லை. தனக்கு உணர்வு இருக்கும் வரை தமிழையே உச்சரித்து விட்டு இறந்தவர் அவர்.

அந்தக் கவிஞன் வாழும் காலத்தில் கூறப்பட்ட குற்றச்சாட்டுகள், அவரது வளர்ச்சியை ஜீரணிக்க முடியாதவர்கள் எடுத்த விமர்சன முடிவுகள், அவர் மீது வெறுப்புக் கொண்டவர்கள் விஷத்தில் தோய்த்துத் தொடுத்த வெங்கணைகள், அவரது பலவீனங்களைப் பற்றிய படங்கள் எழுத்துக்குப் பின்னால் தெரியும் அவரது இன்னொரு முகம், இவையாவும் இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் உதிர்ந்து போகும், எழுத்து எழுத்தாகவே நிற்கும்.

காலம் அவரது எழுத்தை வடிகட்டும் வரைக்கும் இங்கே விமர்சனங்களெல்லாம் வெறும் வேஷங்களாகவேயிருக்கும்.

அவர் பேனா பிடித்த காலத்திலிருந்து பத்து ஆண்டுகள் வரைக்கும் அவரை ஒரு கவிஞரென்று இலக்கண வட்டாரங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

அவர் எழுதிக் கொண்டிருந்தது அவரது சொந்தப் பேனாவினால் அன்று என்று சிலர் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

அவரது பெயருக்கு முன்னால் கவிஞர் என்ற அடைமொழி இடப்பட்ட போது, அந்த அடைமொழியைக் கிள்ளிவிட வேண்டுமென்று பலர் எள்ளி நகையாடினார்கள்.

பல மனப்பாட வியாபாரிகள் அவருடைய பாடல் வரிகளுக்கு 'மூலம்' எங்கெங்கே என்று எடுத்துக் காட்டி தங்களின் அந்தரங்க அரிப்பை சொரிந்து கொண்டு சுகப்பட்டார்கள்.

ஆனால் சருகுகளின் சப்தத்தில் ஆணிவேர் அறுந்து விடுவதில்லை.

சூரியனின் மேல் வீசப்படும் சகதியால் அதன் கிரணத்தைக் கூட அழுக்குப்படுத்தி விட முடியவில்லை.

அவர் முறைப்படி கல்வி கற்காதவர் என்பதாலும் அவரை விட அதிகமாய் நிகண்டு படித்தவர்கள் கூட அவரைப் போல் எழுத முடியவில்லையே என்ற ஏக்கத்தாலும் அவர் எதிர்க்கப்பட்டார்.

கல்வி, ஒருவனைப் புலவனாக்குமே தவிர கவிஞனாக்காது.

கவிஞனாவதற்கு மனோபாவம்தான் முக்கியமே தவிர, மொழி கூட இரண்டாம் பட்சம்தான்.

இதைப் புரிந்து கொள்ள மறுத்தவர்கள் தாம், அவரது ஆரம்ப கால எழுத்துகளின் மேல் இருட்டைப் பூசி விட எத்தனித்தார்கள்.

ஆனால் அவருக்குள் இருந்த நெருப்பைத் தொட்டு அணைத்து விட யாருக்கும் துணிச்சலில்லை. அவர் எவ்வளவுக்கு இளக்கமான கவிஞரோ அவ்வளவுக்கு இறுக்கமானவர்.

அவரால் மலர்களின் பள்ளத்தாக்கில் வசிக்கவும் முடியும். எரிமலையின் உச்சியில் இருக்கவும் முடியும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'


# சுகமான விடியல்

356

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# பொய்கள் மருத்துவத்துறை எங்கும் நீக்கமற நிறைந்திருக்கின்றன

"கவிதைக்குப் பொய் அழகு" என்று சொல்வார்கள். நன்மைபயக்குமெனில் ஆபத்தில்லாத பொய் நியாயமானது என்றும் சொல்வார்கள். ஆனால் மருத்துவத்துறையிலே சொல்லப்படும் பொய்கள் மிக ஆபத்தானவை. சிகிச்சைக்காகச் செல்லும் பல பொது மக்கள் மருத்துவத்துறையினருக்குப் பல பிழையான பொய்யான தகவல்களை வழங்கிவருவது மிகவும் வேதனையானதும் ஆபத்தானதுமான விடயமாக இருந்துவருகின்றது.



கொடுக்கப்படும் மருந்துகளைச் சரிவரப் பாவிக்காத பொழுதும் பாவித்துவருவதாகச் சொல்லும் பொய்கள், பழைய மருத்துவத் தகவல்களை மறைத்துச் சொல்லும் பொய்கள், நல்ல மருந்து கிடைக்கும் என்று நம்பி அறிகுறிகளைக்கூட்டிச் சொல்லும் பொய்கள், பல மருத்துவர்கள் கொடுக்கும் மருந்துகளைத் தகுந்த ஆலோசனையின்றிக் கலந்து பாவித்துக்கொண்டு உண்மை நிலையை மறைக்கச் சொல்லும் பொய்கள் எனப் பொய்களின் வகைகள் பல்கிப் பெருகி மருத்துவத்துறை எங்கும் வியாபித்து நீக்கமற நிறைந்திருக்கின்றன.

ஒவ்வொருவரும் மருத்துவரைச் சந்திக்கும்பொழுது தான் பாவித்துக்கொண்டிருக்கும்மருந்துகளின்சரியான, உண்மையான விபரங்களை மருத்துவருக்குத் தெரியப்படுத்த வேண்டும். ஒவ்வொரு மருந்தும் எவ்வாறு வேலை செய்கிறது என்பதைக் கணிப்பிட்டே தொடர்ந்து வழங்கப்பட வேண்டிய மருந்துகளும் சிகிச்சை முறைகளும் தீர்மானிக்கப்படுகின்றன. எனவே மருந்துகளைக் கூட்டிக் குறைத்து அல்லது மாற்றிப் பாவித்துவிட்டு ஒழுங்காக மருந்து எடுப்பதாகச் சொல்லும் பொய் உண்மையிலேயே மிகவும் ஆபத்தானது.

முன்னைய மருத்துவத் தகவல்கள், முன்பு இருந்த நோய்கள் என்பன ஒருவரின் தற்போதைய சிகிச்சை முறைகளைத் தீர்மானிப்பதற்கு முக்கியமானவை. இதைத் தெரிந்திருந்தும் பலர் பழைய மருத்துவத் தகவல்களை மறைக்க முயல்வதன் காரணம் என்ன?

உண்மையை வரவழைக்க வைத்தியர்கள் சட்டத்தரணிகள் போலவும், துப்புத்துலக்கும் அதிகாரிகள் போலவும் வாதாடித்தான் வைத்தியம் செய்ய வேண்டும் என்ற துர்ப்பாக்கிய நிலையே இங்கு நிலவுகின்றது. துப்புக்கள் துலங்காத பொழுது சில சமயம் துயரமான சம்பவங்கள் நோயாளர்களுக்கு நிகழ்ந்துவிடுகின்றன.

தம் உயிரைப் பணயம் வைத்து ஒரு நோயாளி பொய் சொல்லத் துணிவதன் காரணம் என்ன? அவர்களைப் பொய் பேச வைப்பவர்கள் யார்? இதற்குப் பதில் மிகவும் தெளிவானது துல்லியமானது. மருத்துவர்களும் மருத்துவத்துறை சார்ந்தவர்களுமே நோயாளர்களைப் பொய் சொல்ல வேண்டிய இக்கட்டான சூழ்நிலைக்குள் தள்ளிவிடுகிறார்கள். இதற்கான காரணங்களைப் பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்.

உண்மையைச் சொன்னால் வைத்தியர் கோபித்துக்கொள்வார் அல்லது பேசுவார் என்ற பயம் காரணமாகப் பலர் பொய் சொல்லுகிறார்கள். உயிரைப் பணயம் வைக்கும் அளவுக்கு வைத்தியரின் பேச்சுக் கடுமையானதுதானா?

தாம் சொல்லும் பொய் எவ்வளவு ஆபத்தானது என்று தெரியாமல் பலர் பொய் சொல்கிறார்கள். அதாவது நோய் பற்றிய போதுமான அளவு அறிவு இன்மையால் சொல்லப்படும் பொய் நோயாளர்களுக்கு இது சம்பந்தமான அறிவைப் புகட்ட வேண்டியது மருத்துவக் குழுவின் கடமையே. எனவே இதற்கான பொறுப்பையும் மருத்துவக் குழுவே ஏற்க வேண்டி இருக்கிறது.

உண்மை நிலையை மனம் விட்டுப் பேசும் சூழ்நிலை வைத்தியசாலைகளில் இல்லை. சொல்லப்படும் உண்மை பலருக்குத் தெரிந்துவிடும் என்ற மனப்பயம். இதன் இரகசியத்தன்மை பேணப்படுமா என்ற ஏக்கம். இதன் காரணமாக உண்மையை மறைக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

பதற்றம் அல்லது பயம் காரணமாக ஏற்படும் தடுமாற்றத்தினாலும் பலர் பொய் சொல்கிறார்கள். நோயாளர்களைப் பதற்றப்படுத்தும் குற்றமும் மருத்துவக் குழுமீதே விழுகிறது.

மருத்துவர்களோ, தாதியர்களோ அல்லது வைத்தியசாலை உத்தியோகத்தர்களோ நோயாளர்களுடன் கோபித்துக் கொள்ள முடியாது. அவ்வாறு செய்தால் அது தவறானது என்பதில் சந்தேகம் இல்லை. எனவே நோயாளர்கள் பயமின்றி, பதற்றமின்றி உண்மையான மருத்துவத் தகவல்களை சொல்ல முன்வர வேண்டும். நோயாளர்களில் ஒருவர் தனிமையில் வைத்தியருடன் கதைக்க விரும்பினால் அதற்கான சந்தர்ப்பத்தைக் கேட்டுப் பெற்றுக் கொண்டு உண்மையான தகவல்களை மருத்துவருடன் பகிர்ந்து கொள்ளலாம். இதன் இரகசியத் தன்மை பேணப்படும்.

சில உண்மைகளைப் பேசுவதால் நோயாளர்களுக்கு சில சங்கடங்கள் ஏற்படலாம். ஆனால் அரிச்சந்திரன் உண்மையை மட்டும் பேசியதால் ஏற்பட்ட சங்கடங்கள் போன்று பாரதூரமாக இருக்காது. எனவே உண்மையை மறைத்து உயிரைப் பணயம் வைப்பது சரியானதா எனச் சிந்திக்க வேண்டும். தவிர்க்கப்படக் கூடிய மரணங்களை தவிர்ப்பதற்கு நாம் ஒவ்வொருவரும் எம்மை மாற்றிக் கொள்வதற்கு நிறைய இடம் இருக்கிறது. எம்மையும் சற்று மாற்றிக்கொள்ள முயல்வோம். மருத்துவத்துறையிலே சொல்லப்படும் பொய்கள் மிக ஆபத்தானவை.

பொய்யாமொழிப்புலவரின் வழிநின்று பொய் பேசுவதைத் தவிர்ப்போம். அதன் மூலம் பல அநியாய மரணங்களை நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து தவிர்க்க முடியும்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவின் ஒத்துழைப்புடன் கொத்மலையில் சர்வதேச பல்கலைக்கழகம்

(கொழும்பு)

காலநிலை மாற்றம் தொடர்பான கற்கைநெறிகளை தொடரும் வகையிலான சர்வதேச பல்கலைக்கழகத்தை கொத்மலைப் பிரதேசத்தில் அமைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதற்கான திட்ட வரைபை தயாரித்துள்ளதாக காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன தெரிவித்தார்.

இந்த சர்வதேச பல்கலைக்கழகத்தை அமைப்பதற்காக 400 ஏக்கர் நிலப்பரப்பு கொத்மலை பிரதேசத்தில் அடையாளப் படுத்தப்பட்டுள்ளது. மேலும், அங்கு விஜயம் செய்த காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன தலைமையிலான குழுவினர் பல்கலைக்கழகத்தை அமைக்கும் பணிகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அத்துடன், காலநிலை மாற்றம் தொடர்பான கற்கை நெறிகளைத் தொடரும் வகையிலான சர்வதேச பல்கலைக் கழகத்தை ஆரம்பிப்பதற்கு தேவையான ஒத்துழைப்புகளை வழங்குவதற்கு அமெரிக்கத் தூதரகம் முன்வந்துள்ளது.

மேலும், அமெரிக்க பல்கலைக்கழங்களின் ஒத்துழைப்புகளையும் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பதாக அமெரிக்கத் தூதரகம் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தனவிடம் உறுதியளித்துள்ளது. (நி)

# மாணவர்களுக்கான கல்விக் கடன் திட்டத்திற்கு விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

வட்டியில்லா கல்விக் கடன் திட்டம் தொடர்பில் கல்வி அமைச்சு அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

இதற்கமைய 7 ஆம் கட்ட வட்டியில்லா கல்விக் கடன் திட்டத்திற்கான விண்ணப்பங்கள் கோரும் பணி நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்குரிய விண்ணப்பங்களை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 7 ஆம் திகதி வரை அனுப்பலாம் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வட்டியில்லா கல்விக் கடன் திட்டத்திற்கு 2019, 2020, 2021 ஆகிய ஆண்டுகளில் இலங்கை பரீட்சை திணைக்களத்தினால் நடத்தப்பட்ட க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் விண்ணப்பிக்க தகுதியானவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை http://www.studentloans.mohe.gov.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக விண்ணப்பங்களை இணையத்தில் சமர்ப்பிக்க முடியும்.

குறித்த கடன் திட்டம் தொடர்பான அனைத்து தகவல்களையும் இணையத்தளத்தில் வட்டியில்லா மாணவர் கடன் திட்டத்திற்கான மாணவர் கையேட்டின் ஊடாக அறிந்து கொள்ளலாம்.

மேலதிக தகவல்களை 070 355 5970/79 என்ற எண்ணிற்கு அழைப்பினை ஏற்படுத்தி பெற்றுக் கொள்ள முடியும். (நி)

# லொத்தர் விற்பனையில் இருந்து விலகும் விற்பனையாளர்கள்

(கொழும்பு)

லொத்தர் விலை உயர்வால் லொத்தர் வாங்குவது குறைவதாக அதன் விற்பனை பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர். எதிர்வரும் 6 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் லொத்தர் ஒன்றின் விலையை 40 ரூபாவாக உயர்த்தவுள்ளதாக லொத்தர் சபைகள் அறிவித்தன.

இது குறித்து நேற்று முன்தினம் கருத்து தெரிவித்த அகில இலங்கை லொத்தர் வியாபாரிகள் சங்கத்தின் தலைவர் கிரிஷான் மரம்பகே, இந்த தீர்மானத்தினால் லொத்தர் கைத்தொழில் பாழாகும் அபாயம் உள்ளதாக தெரிவித்தார்.

எனவே எதிர்வரும் 6 ஆம் திகதி முதல் லொத்தர் விற்பனையில் இருந்து விலகுவதற்கு விற்பனை யாளர்கள் தீர்மானித்துள்ளதாக கிரிஷான் மரம்பகே தெரிவித்துள்ளார்.

லொத்தர் விலை உயர்வை கண்டித்து இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (நி)


## ST.JOHN'S COLLEGE, JAFFNA VACANCY

Applications are hereby invited from qualified persons for following vacancies:

- **Accounts Clark/Management Assistant**
  - AAT Fully/Partly qualified
  - Minimum age 23 Years
  - Salary Negotiable
- **Senior Work Supervisor**
  - NDT(Civil) / NVQ Level 5
  - Age limit Preferably 28-35 Years
  - Salary Negotiable

If You are interested, Please send your complete CV with the contact details of to non related referees by regidtered post to reach the below given addrcss before 10th July 2023.

**The Principal,**
**St.John's College,**
**Jaffna.**

(C-6853)


# மதுபானங்களின் விலையை உயர்த்துமாறு கோரிக்கை

(கொழும்பு)

மதுபான விற்பனை வீழ்ச்சியால் ஏற்படும் நஷ்டத்தை சீர்செய்யும் வகையில் மதுபானங்களின் விலையை உயர்த்த வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உற்பத்தி செலவு அதிகரிப்பு மற்றும் மது விற்பனை குறைவினால் ஏற்படும் நஷ்டத்தை குறைக்கும் வகையில் எதிர்வரும் நாட்களில் மதுபானங்களின் விலைகள் அதிகரிக்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் 20 சதவீதம் வரி உயர்த்தப்பட்டதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மதுபான தயாரிப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது. (நி)


## "குருவாய் வருவாய் அருள்வாய் குகனே"
## அருணகிரிநாதர் குருபூசை தினம்
## (ஆனி மூலம் - பூரணை)

| | |
|---|---|
| காலம்:- | 03.07.2023 நாளை திங்கட்கிழமை மு.ப.10.00 மணி |
| இடம்:- | சந்நிதியான் ஆச்சிரமம் (கலை பண்பாட்டுப் பேரவை) |
| தொடக்கவுரை:- | இ.துரை.கணேசமூர்த்தி (ஆசிரியர் -யாழ்ப்பாணக் கல்லூரி) |
| ஆசியுரை:- | திரு.ஆ.சிவநாதன் (இளைப்பாறிய அதிபர்) |
| சிறப்புரைகள்:- | • திரு.P.இரவிச்சந்திரன் (வலயக்கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்) • அதிபர் திரு.செ. பரமேஸ்வரன் |

**கலை நிகழ்வுகள்**

ஞானஒளி அறநெறிப்பாடசாலை மாணவர்கள்
(சித்தி விநாயகர் தேவஸ்தானம் மூளாய்.)

***திருப்புகழிசை (பக்க வாத்திய சகிதம்)***
சாந்தகுமார் கஜானன் குழுவினர்.

***இசைச் சொற்பொழிவு***
அருணகிரியாரின் பக்தி - கனகசபாபதி அபிஷேக்
(கப்பற் துறை பொறியியற் பீடம், மொரட்டுவ பல்கலைக்கழகம்)

***சொற்பெருக்காற்றுகை***
ஜெயசீலன் துஷாந்தன்
(யாழ்ப்பாணக் கல்லூரி)

(16148)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு. — சந்நிதியான் ஆச்சிரமம், சைவ கலை பண்பாட்டுப் பேரவை.


# டெங்கு நோய் காரணமாக 31 பேர் இதுவரை உயிரிழப்பு

(கொழும்பு)



டெங்கு தொற்று காரணமாக நாட்டில் இதுவரை 31 பேர் உயிரிழந்துள்ளதாக டெங்கு நோய் கட்டுப்பாட்டு பிரிவு அறிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டு இதுவரையில் 48,963 பேருக்கு டெங்கு தொற்று உறுதியாகியுள்ளதாகவும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு அறிவித்துள்ளது.

இவர்களில் 24,402 பேர் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளதாகவும் ஜூன் மாதத்தில் 9,559 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே அதிக ஆபத்துள்ள வலயங்களாக 61 பிரதேசங்கள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (நி)

# 'அஸ்வெசும' நலன்புரித் திட்டம் தொடர்பில் மேன்முறையீடுகள் அதிகரிப்பு

(கொழும்பு)

அஸ்வெசும நலன்புரி திட்டம் தொடர்பில் இதுவரையில் நான்கு இலட்சத்து 89 ஆயிரத்து 953 மேன்முறையீடுகள் கிடைக்கப் பெற்றுள்ளது என நலன்புரி நன்மைகள் சபையின் தலைவர் ஜெ.விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அஸ்வெசும நலன்புரி திட்டம் தொடர்பில் இதுவரையில் 6 ஆயிரத்து 783 ஆட்சேபனைகள் கிடைக்கப் பெற்றுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

அதேசமயம், எவரையும் புறக்கணிக்காத வகையில் "அஸ்வெசும" திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அடியவர்களின் குறைகள் தீர்க்க தேரேறி வருகிறாள் நயினை நாகபூஷணி

வட இலங்கையிலே வரலாற்று மகிமையும் வழிபாட்டுச் சிறப்பும் கொண்ட நாற்புறமும் கடலால் சூழப் பெற்ற சப்த தீவுகளில் மணிபல்லவம் எனப்படும் தனிப் பெரும் சிறப்பு மிக்கது நயினாதீவு. அங்கு அலை கடல் நடுவே வீற்றிருந்து அருளாட்சி செய்கின்ற அன்னை பராசக்தி கோவில் கொண்டு எழுந்தருளியுள்ள பதியே நயினையம்பதியாகும்.

சக்தி-பீடங்கள் அறுபத்தி நான்கினுள் புவனேஸ்வரி பீடம் என்னும் தனிச் சிறப்பை அன்னையவள் பெற்று விளங்குகிறாள். அம்பிகையின் மூல விக்கிரகத்தின் தோற்றமும் அதன் வரலாறும் இன்னமும் கண்டறிய முடியாத அதிசயமாகக் காணப்படுகின்றது.

நயினாதீவிற்கு அண்மித்ததாக அனலைதீவு என்னும் ஓர் அழகிய தீவு உள்ளது. அதன் தெற்குப் பகுதியில் புளியந்தீவு என்னும் சிறிய தீவு உள்ளது. அங்கு வரலாற்றுடன் கூடிய நாக தம்பிரான் ஆலயம் உள்ளது. அந்த ஆலயப் பகுதியில் இருந்து நாகபாம்பு பூக்களைக் கொண்டு வந்து அம்மனைப் பூசித்ததாக வரலாறுகள் கூறுகின்றன. ஆகையால் இங்கு நாகம் பூசித்து வந்தமையால் நாகபூசணி எனப் பெயர் வரக் காரணமாயிற்று.



ஆலயத்தின் வரலாற்றுச் சின்னமாக ஆலய வடக்கு கடற் பகுதியில் இரு கற்கள் காணப்படுகின்றன. அதில் ஒன்று பாம்பு சுற்றிய கல் எனவும் மற்றய கல் கருடன் கல் எனவும் அழைக்கப்படுகிறது.

நாகபாம்பு அம்மனுக்கு பூக் கொண்டு வந்த வேளை கருடன் பாம்பை இடைமறித்ததாகவும் பாம்பு கல்லில் சுற்றிக் கொண்டு இருந்ததாகவும் கருடன் மற்றைய கல்லில் அமர்ந்து இருந்ததாகவும் கூறப்படுகிறது. அந்தச் சமயம் வணிக நோக்கத்திற்காக படகு மூலம் சென்ற பணிகச் செட்டியார் இக்காட்சிதனை நேரில் கண்டு மனமுருகி அம்மனை நோக்கி வழிபாடு செய்ததாகவும் பின் கருடன் அவ்விடத்தை விட்டு நீங்கியதாகவும் பின்பு நாகம் பூக்கொண்டு சென்றதாகவும் வரலாறுகள் கூறுகின்றன.. பாம்பு சுற்றி இருந்த கல் பாம்பு சுற்றிய கல் எனவும் மற்றைய கல் கருடன் கல் எனவும் அழைக்கப்படுகிறது.ஆலய பெருந்திருவிழா பதினோராம் திருவிழா அன்று இக்கல்களுக்கு விஷேட பூசை வழிபாடுகள் நடைபெறும். அன்றைய தினம் வானத்தில் கருடன் வட்டமிட்டு பறப்பதை காணலாம்.

நாட்டின் பல பாகங்களிலிருந்து அடியவர்கள் வந்து கூடும் யாத்திரைத் தலமாக விளங்குகிறது. இவ்வாலயத்தில் அடியார்கள் தங்கி நின்று நாகதோச நிவர்த்தி, ஏனைய பரிகார கிரிகைகள் செய்து வருவது வழமை.

பௌர்ணமி தினங்களில் மாதாந்தம் ஸ்ரீ சக்கரபூசை இடம்பெற்று வருகிறது. திருமணமான பெண்கள் தாலி பாக்கியம் நிலைத்திடவும் திருமணமாகாத பெண்கள் நல்வரன் வேண்டியும் வழிபாடு செய்கின்றனர். ஆலய காரியாலயத்தில் ஐயாயிரம் ரூபாய் வைப்பில் இட்டால் குடும்பத்தாரின் பிறந்தநாள், திருமணநாள், தாய், தந்தை நினைவுநாள் போன்ற தினங்களில் வருடாவருடம் அவர்களின் விலாசத்திற்கு விபூதி பிரசாதம் அனுப்பிவைக்கப்படும். அத்தோடு ஆலயத்தில் அன்றைய தினம் அன்னதானமும் வழங்கப்படும். ஆலய நிர்வாக சபையின் இச்சேவை போற்றுதற்கு உரியது.

நயினை நாகபூசணியின் அருளாசி தனிச் சிறப்பானது. தாய்மையுற, மும்மலங்களின் தீமைகள் போய் அகல வழிபடுத்துவது பக்தியோடு அடியவர்கள் கூடி நின்று அம்பிகையின் சந்தம் இசைத்திட துன்பங்களையும் நோய்-நொடிகளையும் நீக்கி அருளும் சக்தியாகவும் குழந்தைப் பேறு இல்லாதோர்க்கு குழந்தைப் பேறு அளிக்கும் மகா சக்தியாக அன்னை நாகபூசணி அருளாசி புரிகிறாள். ஆலய கிழக்கு வாயில் கோபுரம் நூற்று எட்டு அடி உயரம் கொண்டது. ஆலயத்திற்கு அலை கடல் தாண்டி வரும் அடியவர்களுக்கு. பக்திப் பரவசத்தை மேலும் உவந்தளிக்கிறது.

இன்றைய தினம் அம்பிகையின் இரதோற்சவ நிகழ்வில் அடியவர்கள் அனைவரும் கலந்து கொண்டு அவள் அருளாசியை நாடுவோம். அம்பிகையின் தேர் வடம் பிடித்தால் புண்ணியம் கிட்டும். அம்பிகையின் திருவடியில் இடம்பிடித்தவர்கள் ஆவார்கள். தேர்த்திருவிழா, அழித்தலையும் தீர்த்தத் திருவிழா அருளலையும் குறிக்கும்.

எல்லோர்க்கும் நயினை நாகபூசணித் தாய் நல்லன எல்லாம் தந்தருளவும் நல்வாழ்வு என்னும் பேற்றை வழங்கவும் பிரார்த்திப்போம்.

நயினை விசு- இராசநாயகம்,
(ஓய்வு நிலைத் தாதிய உத்தியோகத்தர்).

# கென்யாவில் பயங்கர விபத்து 48 பேர் உயிரிழப்பு

(கென்யா)

மேற்கு கென்யாவில் லண்டியானி என்ற பகுதியில் நேற்று தினம் வேகக் கட்டுப்பாட்டை இழந்த லொறியொன்று வீதியில் சென்று கொண்டிருந்த வாகனங்கள் மற்றும் பொது மக்கள் மீது மோதியதில் 48 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இக்கொடூர விபத்தில் 30 பேர் படுகாயமடைந்துள்ளனர். இதனால் பலி எண்ணிக்கை அதிகரிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கென்யாவில் வீதி விபத்துக்களினால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# பேருந்து தீப்பிடித்து எரிந்து விபத்து 25 பேர் ஸ்தலத்தில் உயிரிழப்பு

## மகாராஷ்டிராவில் துயரம்

(டில்லி)

மகாராஷ்டிரா விரைவு வீதியில் பேருந்து தீப்பிடித்ததில் 25 பேர் உயிரிழந்துள்ளனர்.

மகாராஷ்டிராவின் யவத்மாலில் இருந்து புனே நோக்கிச் சென்ற பேருந்து சம்ருத்தி மகா மார்க் விரைவு வீதியில் புல்தானாவில் திடீரென தீப் பிடித்து விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் சிக்கி 25 பேர் உயிரிழந்தனர். நேற்று அதிகாலை 2 மணியளவில் இந்தத் துயரச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

தீ விபத்தில் சிக்கி மேலும் பலர் பலத்த காயமடைந்துள்ளனர். விபத்துத் தொடர்பாக பேசியுள்ள புல்தானா எஸ்பி பாபுராவ் மகாமுனி, "பேருந்தில் இருந்து இதுவரை 25 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. பேருந்தில் மொத்தம் 32 பேர் பயணம் செய்தனர்.



6-8 பேர் காயமடைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்கள் புல்தானா சிவில் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தனியார் டிராவல்ஸ் பேருந்து புனே நோக்கிச் சென்று கொண்டிருந்த போது பிம்பால்குடா கிராமம் அருகே அதிகாலை 1.30 மணியளவில் எதிர்பாராதவிதமாக மின் கம்பத்தில் மோதியுள்ளது. பின்னர் சாலையில் உள்ள டிவைடரில் மோத தீ பற்றியது. பயணிகளில் பலர் நாக்பூர், வார்தா மற்றும் யவத்மால் ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகிறது. (நி)

# மீனுடன் செல்பி எடுத்த இருவர் தாய்லாந்தில் கைது



(தாய்லாந்து)

நட்சத்திர மீனுடன் செல்பி எடுத்த சீன சுற்றுலாவாசிகள் இருவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட விநோத சம்பவம் தாய்லாந்தில் இடம்பெற்றுள்ளது.

குறித்த சுற்றுலாவாசிகள் நட்சத்திர மீன்களைக் கையில் பிடித்து அதனுடன் புகைப்படம் எடுத்து அதனை இணையத்தில் வெளியிட்டுள்ள நிலையிலேயே தாய்லாந்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டு பின்னர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். தாய்லாந்து அரசு இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் விதமாக பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. குறிப்பாக பவளப் பாறைகள் மற்றும் அழியக் கூடிய சூழலில் வாழும் கடல் வாழ் உயிரினங்களைப் பாதுகாப்பதற்காக கடுமையான சட்டங்களை அமுல்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# ஆழ்கடல் சுற்றுப் பயண திட்டங்களை ஒத்தி வைத்தது ஓஷன்கேட் நிறுவனம்

(ஒட்டாவா)

1912 ஆம் வருடம், "டைட்டானிக்" எனும் சொகுசு கப்பல் வடஅட்லாண்டிக் கடலில் தனது முதல் பயணத்திலேயே மூழ்கியதும் 1500 பேர் பலியானதும் உலகளவில் இன்று வரை பேசப்படும் ஒரு சோக நிகழ்வாக இருக்கிறது.

ஆழ்கடலில் தரை தட்டி நிற்கும் அந்த "டைட்டானிக்" கப்பலை காண அவ்வப்போது முயற்சிகள் செய்யப்பட்டு வருகிறன்றன.

அத்தகைய ஒரு முயற்சியாக இரு வாரங்களுக்கு முன், ஆழ்கடல் ஆராய்ச்சி சுற்றுப் பயணத்தில் நிபுணத்துவம் வாய்ந்த ஓஷன் கேட் நிறுவனத்தின் "டைட்டன்" நீர் மூழ்கியில், டைட்டானிக் கப்பலை காண அதன் மாலுமி உட்பட 5 பேர் பயணித்தனர். ஆனால், துரதிர்ஷ்டவசமாக அந்த நீர் மூழ்கி வெடித்து,

அதில் பயணம் செய்த ஐவரும் பலியானார்கள். இதனால் ஆழ்கடல் சுற்றுப்பயணத் திட்டங்களை காலவரையறையின்றி மூடுவதாக அந்த நிறுவனம் அறிவித்திருந்தது. (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிறிய விஷயத்தில் நியாயம் தவறுபவன்,
பெரிய விஷயத்திலும் தவறுவான்.
- இயேசுநாதர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வீதிகளை ஆக்கிரமிக்கும் பற்றைகள் அதைக் கவனிக்காத உள்ளூராட்சி சபைகள்

கோயிலைக் கட்டுவது சுலபம். அதனைப் பராமரிப்பதுதான் கடினம்.

பொது மண்டபங்களை நிர்மாணிக்கலாம். அதைத் தொடர்ச்சியாகப் பாதுகாப்பதுதான் சிரமம்.

இதுபோலத்தான் வீதிகள், குச்சொழுங்கைகள் என்பவற்றை அமைக்கலாம்.

ஆனால் அமைத்த வீதிகளை - ஒழுங்கைகளை தொடர்ச்சியாகப் பராமரித்து வர வேண்டும். அதைச் செய்யாத விடத்து, வீதிகள் சேதமடைவதுடன் மிகக் குறுகிய காலத்தில் அந்த வீதிகள் குன்றும் குழியுமாகப் பயனற்றுப் போகும்.

தவிர, வட பகுதியில் போரினால் பாதிக்கப்பட்டு மீள் குடியேற்றம் நடந்த பிரதேசங்களில் வீதிகள் புனரமைக்கப்பட்டதுடன் ஒழுங்கைகளும் நல்லமுறையில் செப்பனிடப்பட்டன.

எனினும் மீளக் குடியமர்ந்த இடங்களில் இன்னும் மக்கள் முழுமையாகக் குடியமராத தன் காரணமாக, மக்களின் வாழ்விடங்களும் அவர்களின் பயிர் செய் நிலங்களும் பற்றைக் காடாகக் கிடக்கின்றன. இருந்தும் அந்தப் பற்றைகளைத் துப்புரவு செய்து அங்கு குடியிருக்கின்ற மக்களுக்கு உதவ வேண்டும் என்ற மனநிலை ஏனையவர்களிடம் இல்லாத காரணத்தால், பற்றைகள் சூழ்ந்த பிரதேசங்களில் மக்கள் வாழ்கின்ற துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதுதவிர, இன்னுமோர் பெரும் பிரச்சினையை மீள் குடியமர்ந்த மக்கள் சந்தித்துள்ளனர்.

அதாவது மீளக் குடியமர்ந்த இடங்களில் ஒழுங்கைகள் மற்றும் உள்வீதிகள் புனரமைக்கப்பட்டன. இருந்தும் இப்போது அந்த வீதிகளினதும் ஒழுங்கைகளினதும் இரு மருங்கிலும் வளர்ந்து நிற்கும் விடத்தல் பற்றைகளும் இதர செடி கொடிகளும் அந்த வீதிகளை - ஒழுங்கைகளை ஆக்கிரமித்து நிற்கின்றன.

இதனால், புனரமைக்கப்பட்ட வீதிகளால் பயணிப்பது பயம் நிறைந்ததாகவும் விபத்துக்கள் ஏற்படக்கூடியதாகவும் வாகனங்களை முள்ளுகள் கீறிக் கிழிப்பதாகவும் நிலைமை உள்ளது.

இங்குதான் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி சபைகள் அந்தப் பற்றைகளை வெட்டித் துப்புரவு செய்து குறித்த வீதிகளில் மக்கள் பாதுகாப்பாகவும் அச்சமின்றியும் பயணிப்பதற்கு வழி செய்யப்பட வேண்டும்.

இருந்தும் அது விடயத்தில் பிரதேச சபைகள் இம்மியும் கவனிப்பதாக இல்லை.

தற்போது மக்களால் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி சபைக்கான மக்கள் பிரதிநிதித்துவம் இல்லாத காரணத்தால், சம்பந்தப்பட்ட சபை நிர்வாகிகள் இது விடயத்தில் கவனமெடுத்து, வீதிகளை ஆக்கிரமித்துள்ள பற்றைகளை வெட்டித் துப்புரவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேநேரம் இதனைப் பிராந்திய உள்ளூராட்சி ஆணையம் கட்டாயப்படுத்திச் செயற்படுத்த வேண்டும்.

இல்லையேல் வீதி புனரமைக்கப்பட்டும் எந்தப் பயனும் இல்லை என்பதாக நிலைமை முடியும்.

# நாட்டை சீர்படுத்தும் சிங்களத் தலைவர்கள் இல்லை என்பதை காலம் எடுத்துக்காட்டுகிறது

## சிறீதரன் எம்.பி

(கொழும்பு)

சம்பள உயர்வுக்காக போராடும் மலையகதோட்ட தொழிலாளர்களின் ஈ.பி.எப் மற்றும்,ஈ.ரி.எப் ஆகிய வற்றையும் அரசாங்கம் விட்டுவைக்கவில்லை.

நடுத்தர மக்களின் எதிர்கால சேமிப்பை கொள்ளையடிக்கவில்லை என்பதை அரசாங்கத்தால் வெளிப்படைத் தன்மையுடன் குறிப்பிட முடியுமா? இந்த நாட்டுக்கு சிறந்த சித்தாந்தம் என்பதொன்று கிடையாது.

நாட்டை சீர்படுத்தும் சிறந்த சிங்களத் தலைவர் ஒருவர் இல்லை என்பதை காலம் எடுத்துக்காட்டியுள்ளது என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற தேசிய கடன் மறுசீரமைப்பு செயற்திட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது, நாட்டின் பொருளாதாரத்தின்" படுவீழ்ச்சி, நடுத்தர மக்களின் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றை அரசாங்கம் கொள்ளையடிக்கப்போகிறது என்று குறிப்பிட்ட விடயங்களை அரசாங்கம் இன்று பகிரங்கமாக ஏற்றுக்கொண்டுள்ளது.

மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க பல உத்தரவாதங்களை வார்த்தைகளாக வழங்குகிறார்கள். இந்த நாட்டில் உத்தரவாதம் வழங்குவது கடந்த 100 ஆண்டுகாலமாக அவல் சாப்பிடுவது போல இலகுவானதொரு விடயமாகவே உள்ளது. இலகுவாக குறிப்பிடுவார்கள். ஆனால் அவை நடைமுறைப்படுத்தப்படுவதில்லை.

600 ரூபாய் சம்பளம் பெறும் தோட்டத் தொழிலாளர்களின் ஊழியர் சேமலாப நிதியத்தையும் கொள்ளையடிப்பது மிக மோசமானது. நாட்டில் உள்ள ஏழைகளின் சேமிப்பைக் கொள்ளையடித்து ஆட்சி செய்யும் நிலை ஏன் தோற்றம் பெற்றது என்பதற்கான காரணத்தை அரச தலைவர்கள் சிந்திக்க வேண்டும்.

சிங்கள சகோதரர்களிடம் ஒரு வேண்டுகோளை முன்வைக்கிறேன். கடந்த 30 ஆண்டு காலங்களில் தமிழர்கள் போர் என்ற பெயரில் அழிக்கப்பட்டார்கள். போரின் ஊடாக அரச தலைவர்கள் என்று குறிப்பிட்டுக் கொள்ளும் முதலைகள் தங்களை வளப்படுத்திக் கொண்டார்கள். மோசடி செய்யப்பட்ட சொத்துக்கள் உகண்டா உட்பட வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ளன. ஆனால் மக்கள் ஏழைகளாகவே வாழ்கிறார்கள். இவ்வாறு ஏழைகளின் இறுதிச் சேமிப்பையும் அரசாங்கம் விட்டுவைக்கவில்லை என்பதை சிந்திக்கவில்லை எனத் தெரிவித்தார். (4-7)

## பல திருட்டுக்களுடன் தொடர்புடைய சந்தேக நபர் பொலிஸாரால் கைது

பல திருட்டுக்களுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவரிடமிருந்து திருடப்பட்ட பொருட்களும் மீட்கப்பட்டதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

பல திருட்டு சம்பவங்கள் தொடர்பாக தேடப்பட்டு வந்த நபர் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய பொலிஸார் நேற்று சனிக்கிழமை துன்னாலையில் வைத்து சந்தேகநபரை கைது செய்துள்ளனர்.

அவரிடம் இருந்து திருடப்பட்ட ஆறு தொலைபேசி, இரண்டு மின் விசிறி, மூன்று ரோல் தண்ணீர் பாய்ச்சும் வயர், நீர்ப் பம்பி ஒன்று என்பன மீட்கப்பட்டுள்ளன.

இப் பொருட்களுக்கு உரித்துடையோர் இருந்தால் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ள முடியும் என நெல்லியடிப்பொலிஸார் தெரிவித்துள்ளனர். (4-7,60)

## எழுத்தாளர் பிரம்மியா சண்முகராஜாவின் கனதி சிறுகதை நூல் வெளியீடு

இலக்குமி பிரசுராலய வெளியீட்டில் எழுத்தாளர் பிரம்மியா சண்முகராஜாவின் 'கனதி சிறுகதை நூல் வெளியீடு, நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு திருகோணமலை நகரசபை பொது நூலக கேட்போர் கூடத்தில் எண்ணம்போல்வாழ்க்கை அமைப்பின் தலைவர்திரு. கனக.தீபகாந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக திருகோணமலை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சூ.பார்த்தீபனும் கௌரவ விருந்தினர்களாக மூத்த எழுத்தாளர் கேணிப்பித்தன் ச.அருளானந்தமும்திருகோணமலை புனித மரியாள் கல்லூரியின் ஆசிரியர் க.ராஜன் அவர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நூலின் வெளியீட்டு உரையை இலக்குமி பிரசுராலய இயக்குநர் கரவை மு.தயாளனும் நூல் விமர்சனத்தை வ.முரளிதரனும் வழங்க, நூல் வெளியீட்டினை கவிஞர் ஷெல்லிதாசன் ஆரம்பித்து வைக்க, ஏற்புரையினை நூலாசிரியர் வழங்குவார். (நி-6)

## போட்டி நுழைவுக்கட்டணத்தை மீள பெற்றுக் கொள்ளுங்கள்

### யாழ்.மாநகர சபை

யாழ் . மாநகரசபையினால்2022.11.12, 2022.11.13 ஆம் திகதிகளில் நடத்தப்பட்ட முதல்வர் கிண்ணச்சதுரங்கப் போட்டியானது முழுமையாக நடத்தி முடிப்பதற்குரிய சாத்தியப்பாடு இல்லாத காரணத்தினால் போட்டியாளர்களிடமிருந்து அறவீடு செய்யப்பட்ட நுழைவுக்கட்டணம்ரூபா500.00 இனை 2023.05.26 ஆம் திகதி தொடக்கம் உரியவர்களிடம் சமர்ப்பித்து வருகின்றது.

இதுவரையில் பணத்தினை மீளப்பெற்றுக்கொள்ளாதவர்கள் எதிர்வரும் 10 ஆம் திகதி புதன்கிழமை மாலை 3.00 மணிக்கு முன்னர் மாநகரசபையின் சிறாப்பர் பகுதியில் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.மாநகரசபையினர் கேட்டுக் கொள்கின்றனர்.

முடிவுத்திகதியின் பின்னர் போட்டிக்கட்டணமானது வழங்கப்பட மாட்டாது என்பதுடன் மாநகர சபையானது அக்கட்டணம் தொடர்பில் எவ்விதத்திலும் பொறுப்பேற்காது எனவும் இத் தகவலானது 075 658 2556 இலக்க JMC Mayor Cup எனும் Whatsapp குழுமத்திலும் வெளியிடப்பட்டுள்ளதாகவும் யாழ். மாநகர சபை அறிவித்துள்ளது. (4-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக **இன்று காலை 8.30 மணியிலிருந்து மாலை 17.00 மணி வரை யாழ். பிரதேசத்தில்** நெபாட் வலைத் தொழிற்சாலை, ஸ்ரீலங்கா ஐஸ் தொழிற்சாலை, ATI குருநகர், கட்டிட திணைக்களம், சீனோர், ஐஸ் தொழிற்சாலை -கடற்கரை வீதி, கடற்கரை வீதி பழைய பூங்கா வீதிசந்தி, டேவிட் வீதி கடற்கரைவீதி, குருநகர் ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** ரொப்பிக்கல் லங்கா (தும்புதொழிற்சாலை) - புலோப்பளை- ஆரத்திநகர், அல்லிப்பளை, தென்னை ஆராய்ச்சி மையம் - தர்மகேணி, பண்ணைவீதி, புலோப்பளை, பளை, தம்ப காமம், தர்மகேணி ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** பூந் தோட்டம் தொழிற் பூங்கா, புதிய கார்கில்ஸ் பூட் சிற்றி, பூந்தோட் டம் கல்வியியற் கல்லூரியடி, பூந்தோட்டம் தொழில் பேட்டை, காத்தார் சின்னகுளம், மகாறம்பைக் குளம், பூந்தோட் டம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## இலங்கையில் மீண்டும் நிலநடுக்கம் பதிவானது

(கொழும்பு)

இலங்கையின் தென் கிழக்கு கடற்கரையிலிருந்து 1200 கிலோமீற்றர் தொலைவில் ஏற்பட்ட ஆழ் கடல் அதிர்வு கொழும்பு பத்தரமுல்ல, அக்குரஸ்ஸ மற்றும் காலி போன்ற பகுதிகளில் உணரப்பட்டுள்ளதாக புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது. (நி)

## மணல் ஏலவிற்பனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட நீதி வான் நீதிமன்றத்தின் பகிரங்க ஏலவிற்பனை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு எமது நீதிமன்ற வளாகத்தில் பகிரங்க மணல்ஏலவிற்பனை நடைபெறவுள்ளது.

எனவே ஏல விற்பனைக்கான மணலினை ஏலவிற்பனை ஆரம்பமாவதற்கு அரை மணித்தியாலம் முன்பாக பதிவாளரின் அனுமதியுடன்பார் வையிடலாம் என கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகள் கிடைக்கும் வரை

# போராட்டம் தொடரும்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

(யாழ்ப்பாணம்)

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இம்முறையாவது காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி வழங்க வேண்டும் என தெரிவித்து யாழில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் போராட்டம் முன்னெடுப்பு.**



வடக்கு-கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் ஏற்பாட்டில் நேற்று நல்லை ஆதீனத்திற்கு முன்பாக குறித்த கவனயீர்ப்பு முன்னெடுக்கப்பட்டது.

எங்களுக்கு 53 ஆவது ஐக் கிய நாடுகள் சபையின் கூட்டத் தொடரிலாவது நீதி கிடைக்கப் பெற வேண்டும் என யாழ். மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கத் தலைவி திருமதி.சிவபாதம் இளங்கோதை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது குழந்தைகளெல்லாம் ஆயுதம் தூக்கவில்லை. அவ்வாறு சரணடைந்த எமது பிள்ளைகளுக்கான நீதியை ஐ.நா தான் வழங்க வேண்டும்.

ஐ.நாவை நம்பித்தான் தாங்கள் இருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்த நாட்டில் நீதி கிடைக்காதவரை ஐக்கிய நாடுகள் சபையிடம் நீதியைக் கோருவோம். தற்போது ஐ.நாவில் 53 வது கூட்டத்தொடர் நடை பெற்றுக்கொண்டிருக்கும் நிலையில் எமது நாட்டுப் பிரச்சினைகளை அவதானித்துக் கொண்டிருக்கின்றார்கள். இம்முறையும் காலக்கெடு வழங்கக் கூடாது.

இவ்வளவு ஆதாரங்களைக் காட்டியும் இனப் படுகொலை நடக்கவில்லை எனக் கூறுகின்றனர்.

இவர்களின் சன்மானமோ நஷ்டஈடுகளோ எங்களுக்குத் தேவையில்லை. எமது உறவுகள் கிடைக்கும் வரை சாகும் வரை தொடர்ந்தும் போராடுவோம் எனத் தெரிவித்தார். (நி-6)

# விசாரணைகளில் ஈடுபட்ட பொலிஸாரை தாக்கிய நபர்களுக்கு விளக்கமறியல்

(மன்னார்)

மன்னார் உயிலங்குளம் பகுதியில் விசாரணைக்காக சென்ற பொலிஸார் மீது தாக்குதல் மேற்கொண்ட சந்தேக நபர்களுக்கு எதிர்வரும் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் மாவட்ட பதில் நீதிவான் நேற்று உத்தரவு வழங்கியுள்ளார்.

கடந்த 24 ஆம் திகதி மாலை மன்னார் உயிலங்குளம் மதுபானசாலைக்கு அருகில் சிலர் கலவரத்தில் ஈடுபடுவதாக பொதுமக்கள் சிலர் உயிலங்குளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதை யடுத்து உயிலங்குளம் பொலிஸார் சம்பவம் நடைபெற்ற இடத்துக்குச் சென்று விசாரணை செய்ததுடன் கலவரத்தில் ஈடுபட்டவர்களை அங்கிருந்தவர்கள் அடையாளம் காட்டியுள்ளனர்.

இதற்கமைய பொலிஸார் சந்தேகநபர்களை விசாரணை செய்வதற்கு அவர்களின் வீட்டை நோக்கிச் சென்றிருந்த போது பொலிஸார் மீது அவ் வீட்டிலிருந்தவர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

தாக்குதலை மேற்கொண்டவர்களில் 5 ஆண்களும் 5 பெண்களும் உள்ளடங்குவதாக தெரியவந்துள்ளது. இதனால் பொலிஸார் காயங்களுக்கு உள்ளாகி மன்னார் பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் சந்தேக நபர்களை நேற்று முன்தினம் மன்னார் மாவட்ட பதில் நீதிவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்திய போது குறித்த 10 சந்தேகநபர்களையும் எதிர்வரும் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளார். (நி-6)



சுகாகரன் பிரதீபாவின் அன்பளிப்பின் ஊடாக கணபதி அறக்கட்டளை நிறுவனத்தால் ரூபா 450,800 பெறுமதியான 10 துவிச்சக்கர வண்டிகள் பாடசாலை மாணவர்களுக்கு நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டன. (படம்:-மகாலிங்கம்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 250 | 260 | 250 |
| உருளைக்கிழங்கு | 180 | 220 | 240 |
| பச்சைமிளகாய் | 800 | 850 | 1000 |
| தக்காளி | 300 | 400 | 450 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 240 | 280 |
| கோவா | 300 | 300 | 250 |
| கரட் | 350 | 500 | 600 |
| பூசணி | 120 | 100 | 120 |
| புடோல் | 200 | 240 | 300 |
| வாழைக்காய் | 100 | 200 | 160 |
| சின்ன வெங்காயம் | 380 | 350 | 450 |
| பெரிய வெங்காயம் | 140 | 140 | 140 |
| பாகற்காய் | 600 | 500 | 800 |
| வெண்டக்காய் | 300 | 300 | 320 |
| கருணைக் கிழங்கு | 180 | 180 | 200 |
| பயற்றங்காய் | 600 | 600 | 400 |
| லீக்ஸ் | 320 | 300 | 350 |
| பீற்றூட் | 420 | 400 | 400 |
| கறிமிளகாய் | 400 | 350 | 450 |
| முருங்கைக்காய் | 800 | 700 | 800 |
| போஞ்சி | 550 | 500 | 500 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | 200 |
| கீரை - 1 பிடி | 60 | 80 | 80 |
| தேசிக்காய் | 250 | 200 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 60-80 |
| இராசவள்ளி | 350 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 400 | 500 | 800 |
| முள்ளங்கி | 180 | 160 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 35 | 60 |
| ஈரப்பலா | 180 | 200 | 200 |

# வயது குறைந்தவர்களை இலக்கு வைத்து மது விற்பனை

## அக்கராயன் மக்கள் குற்றச்சாட்டு

(முறிகண்டி)

வயது குறைந்தவர்களை இலக்கு வைத்து மது விற்பனை இடம்பெறுவதாக கிளிநொச்சி அக்கராயன் பிரதேச மக்கள் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர்.

பொருத்தமற்ற இடத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளமையால் மக்கள் வாழ அச்சமான சூழல் காணப்படுகின்றது. அதே வேளை அந்த பகுதி மறைவுகள் கொண்ட பிரதேசமாக இருப்பதால், வயது குறைந்தவர்கள் உள்ளே செல்ல முடியாத நிலையில் வேறு நபர்களைக் கொண்டு வாங்குகின்றனர்.

பின்னர் பற்றை மறைவுகள், குளக்கட்டுக்கள் மற்றும் வீதிகளில் இருந்தும் மது அருந்துகிறார்கள். இதனால் இவ் வழியால் இரவு வேளைகளில் பயணிக்கும் மக்கள் பல இன்னல்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே இவ்வாறான செயல்களை தடுப்பதற்கு உரிய தரப்பினர்கள் நடவடிக்கை எடுப்பதோடு இளம் சமுதாயத்தினரை தவறான வழிக்கு இட்டுச் செல்லும் குறித்த மதுபான சாலையை அகற்றுமாறு அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தனர். (நி-6-100)

# 30 மில்லியன் பெறுமதியான கேரளக் கஞ்சா மன்னாரில் மீட்பு



(மன்னார்)

மன்னார் இலுப்பக்கடவை பிரதேசத்தில் இலங்கை கடற்படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது 92 கிலோகிராம் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

வடமத்திய கடற்படை கட்டளைக்கு சொந்தமான புவனேகா மற்றும் கஜபா ஆகிய படைகள் இணைந்து முன்னெடுத்த விசேட நடவடிக்கையின் போது, கடற்படையினர் சந்தேகத்திற்குரிய மூன்று சாக்குகள் அருகில் உள்ள புதர்களுக்குள் மறைத்து வைத்திருந்ததாக கடற்படையினர் தெரிவித்தனர்.

அதன்படி, சுமார் 92 கிலோ 250 கிராம் எடையுள்ள 42 கஞ்சா மூடைகளை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சாவின் மொத்த மதிப்பு சுமார் 30 மில்லியன் ரூபாவாகும்.

மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படும் வரை, போதைப் பொருள் கடற்படையின் காவலில் வைக்கப்பட்டுள்ளது. (நி-6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு

## யாழ்ப்பாணம் நவக்கிரி பகுதியில் 61 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

**நிலப்பரப்பு**

- நவக்கிரி மாணிக்க பிள்ளையார் கோயில் வீதியில்
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- 4 பரப்புடன் 5 அறைகள் 3 கோல் இணைந்த குளியலறை அடங்கிய பெரிய வீடு உள்ளது.
- குடிதண்ணீர் கட்டுக் கிணறும் உள்ளது.
- 3 வருடங்கள் பூர்த்தி அடைந்த தென்னைகள் உள்ளன.
- நிலாவரை வற்றாக்கிணற்றில் இருந்து 1 km தூரம்
- 1 பரப்பின் விலை 1200000 (பன்னிரண்டு இலட்சம்)




**பார்வையிடும் நேரம் :**
**காலை 6 மணி தொடக்கம்**
**மாலை 6 மணிவரை**

**தொடர்புகளுக்கு: ஜெயம்**

(16164)

**077 814 7389, 077 986 5457**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்

IELTS, A1UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH

- GUARANTEED TO 7.5 in IELTS Exam.
- PASS in UK A1 Exam.
- Exam REGISTRATION CENTER.

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

T.P : 077 780 3970, 074 007 1970

(15765)

## VILLAGE HOTEL JAFFNA EXPRESS

யாழ் - கொழும்பு பஸ் சேவை

AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பஸ் சேவை இனி வரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில்...



கட்டணம் - 2800/=

(16033)

T.P:077 544 8503

## காணி விற்பனைக்கு

சுன்னாகம் தெற்கு சுன்னாகத்தில் 41 பரப்பு காணி விற்பனைக்கு உள்ளது. 3, 2 1/2, 2, 1 1/2 பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது.

பாதை 18 அடி (உள்ளக பாதை)

இரண்டு பிரதான பாதையுள்ளது.



- சுன்னாகம் BOC வங்கி முன் வீதியில் இருந்து 1 1/2 Km தூரம்
- மருதனார்மடத்தில் இருந்து உரும்பிராய் வரும் வீதியில் ஆச்சிரமம் வீதியில் இருந்து 2 km தூரம்.
- மருதனார்மடத்தில் இருந்து உரும்பிராய் வரும் வீதியில் விலாத்தியடி வீதியில் இருந்து 1 1/2 km தூரம்
- ஒரு பரப்பின் விலை 18 இலட்சம் தொடக்கம் 15 இலட்சம் வரை

(16140)

தொடர்பு கொள்ள

076 788 9409, 074 171 0608

## Science Ocean

2023 Repeat

ஆரம்பம் July 03,10.00 am

INORGANIC

Mon-Fri - 10.00 am

CHEMISTRY : Ka.Subeesan

(16122)

Brown Road, Jaffna.

076 236 3470, 077 430 7829

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1983ல் பிறந்த திருவாதிரை நட்சத்திரம், சூரியன் செவ்வாய் இரண்டில், கிரக பாவம் 28, அரசதொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

(16132)

076 677 9813

077 335 9012

## சரவணபவன் பென்சி கவுஸ் இன் மாபெரும் ஆடித் தள்ளுபடி

கொழும்பு மொத்த விலையில் 30% விலைக்கழிவுடன் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

பிளாஸ்ரிக் பொருட்கள், கிறீம் வகைகள், பான்சி வகைகள், பாட்டா வகைகள், சில்வர், மாபிள், அலுமினிய பொருட்கள், சோடனைப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், மணிக்கூட்டு வகைகள், தையல் உபகரணங்கள், அன்பளிப்பு பொருட்கள், மொடன் பட்டின் வகைகள், அழகுசாதனப் பொருட்கள், மாஸ் வகைகள், குடை வகைகள், கவரின் வகைகள், பாடசாலை உபகரணங்கள், பாக் வகைகள் இன்னும் பல பொருட்கள் ஒரே இடத்தில் மலிவாக பெற்றுக் கொள்ளலாம்.

உரிமையாளர் :

தே. கலைத்தாசன் (கரன்)

021 315 5900

26/1, ஜும்மா பள்ளிவாசல் லேன், (கஸ்தூரியார் வீதி) யாழ்ப்பாணம்.

(16160)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 12 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபர் வீதி முகப்புடன்
- புத்தூர் தண்ணீர் தாங்கி அருகாமை(நிலப்பரப்பு)
- மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- வியாபார நிலையங்கள், திருமண மண்டபங்கள், வீடு அமைப்பதற்கு உகந்த இடம்
- ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்.
- பார்வையிடும் நேரம் காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை
- நன்னீர் ஊற்று.

(16160)

076 826 0354, 076 057 0354


# ஓராண்டு நினைவலைகள்

## அமரர் திருமதி நற்குணராணி டானியல்

திதி : சதுர்த்தசி 02.07.2023

வையத்துள் வாழ்வாங்கு வாழ்வார் – வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்.



அன்பின் வடிவமாய்
எம்மை ஆதரித்த அன்னையே
இப்புவியில் எம்மை விட்டு
எங்கம்மா சென்றாய்
நித்தமும் புலம்புகின்றோம்
எனக்கு ஆதரவு யாரம்மா?

இத்துயர் தீர
எழுந்து வந்திடம்மா
ஆழி சூழுலகில் எம்மை
அன்பினால் வென்ற அம்மா
தோழிரு வலிமை குன்றி
துடிக்கின்றோம் உம் பிரிவால்
பாரிரு உலகில் உன்னை
பார்க்கவே முடியவில்லை
ஏழிரு உலகந்தன்னில்
எங்குதான் சென்றீரோ?

அன்னைமடியில்
19.01.1955

ஆண்டவனடியில்
13.06.2022



மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய்.

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்
மகள் நிரஞ்சா, பேரன் துஷாந்

(16081)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.